Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி-22 06-07-2005 புதன்கிழமை ஓசை 138



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-12149)











கரும்புலிகள் நினைவு நிகழ்வில் தேசியத்தலைவர் அவர்கள் ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்துவதையும், முதற்கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

# தமிழர் தாயகமெங்கும் எழுச்சிகர கரும்புலிகள் நாள்

## பலதரப்பையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(நமது செய்தியாளர்)

**கரும்புலிகள் நாள் நினைவு நிகழ்வுகள் நேற்றுத் தமிழர்தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டன. கரும்புலிகளின் தியாகத்தை நினைவு கூர்ந்து பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பலதரப்பையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.**



கரும்புலிகள் நாள் எழுச்சி நிகழ்வுகள் யாழ். குடாநாட்டில் பேரெழுச்சியுடன் நடைபெற்றன. மாவட்டத்தின் பிரதான நிகழ்வு முதற் கரும்புலி கப்டன் மில்லர் வீரகாவியமான நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், ஏனைய நிகழ்வுகள் கோட்டரீதியாகவும், பொது நிறுவனங்களிலும் ஒன்றியங்களிலும், பொது மண்டபங்களிலும் சமநேரத்தில் நடைபெற்றன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள கப்டன் மில்லரின் நினைவாலயத்தில் நடைபெற்ற நிகழ்விற்கு சேரன் சிவராசா தலைமை தாங்கினார்.

மாலை நிகழ்வாக நெல்லியடிச் சந்தியிலிருந்து கரும்புலிகளின் உருவப்படங்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் நெல்லியடி மகாவித்தியாலய முதற் கரும்புலி கப்டன் மில்லரின் தூபியடிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு நடைபெற்ற நிகழ்வில் மில்லரது தாயார் திருமதி கமலாதேவி வல்லிபுரம் மில்லரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை நல்லூர் கோட்டத்திற்கான நிகழ்வு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் நடைபெற்றது. கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பருதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர் கப்டன் கலைமதியின் தாயார், பிரதேச அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் கலையரசன் ஆகியோர் அணிவித்தனர்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையிலும் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் பேரெழுச்சியுடன் நடைபெற்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் சக்திபேரணியை எதிர்பார்த்து கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

### –நான்காவது நாளாக பேரணி நகர்கிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்கள் சக்தி பேரணி கொழும்பை அண்மிக்கவுள்ள 12ஆம் திகதியன்று கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கமைய கொழும்பில் மட்டும் நான்காயிரம் பொலிசாரைப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கும், பொலிஸ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை தொடர்பாக பாராளுமன்றில் இருநாள் விவாதத்திற்கு ஏற்பாடு

### சபாநாயகர் நேற்று அறிவிப்பு

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்புக் குறித்து சிறிலங்கா பாராளுமன்றத்தில் இரு நாள் விவாதம் நடத்தப்படும் என்று சபாநாயகர் லொக்கு பண்டார அறிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்றம் கூடியபோது சபாநாயகர் இதைத்தெரிவித்தார்.

முன்னதாக கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு ஆவணத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி. பாராளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ச கடிதம் அனுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பொதுக் கட்டமைப்பு ஆவணத்தை பாராளுமன்ற சபாநாயகரிடம் ஒப்படைத்துள்ளதாகப் பதிலளித்திருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

சேவியர் கடைச்சந்திக்கு அருகாமையிலுள்ள இலக்கம் -158 ஆனந்த நகர் 1/2 ஏக்கர் காணியும் 10 பண்ணையிலுள்ள 104 இலக்கத்துக்குரிய 2ஏக்கர் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- இல 104- 10 பண்ணை, கனகபுரம், எஸ். குகன். (6338)

### தவறிவிட்டது.

முனியாண்டி உணவகம் கரடிப் போக்கு என்ற முகவரியில் வசிக்கும் இராமையா சதாய என்பவரது அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை, வாகன அனுமதிப் பத்திரம் என்பன தவறிவிட்டது, கண்டெடுத் தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப் படுகிறீர்கள். (6329)

### தவறிவிட்டது.

கிளிநொச்சிக்கும், மாங்குளத்திற்கும் இடையில் சிவராசா பிரபாகரன் என்பவரது அடையாள அட்டை,பயண அனுமதி அட்டை,பேஸ் என்பன தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத் தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக் குமாறு கேட்கப்படுகின்றீர்கள் (6333)

### தவறிவிட்டது

கந்தசாமி கோவிலுக்கும், காவல்துறை நடுவப்பணியகத்திற்கும் இடையில் டயறி ஒன்று முக்கிய ஆவணங்களுடன் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கு மாறு வேண்டப்படுகிறீர்கள் (6336)

### காணிவிற்பனைக்குண்டு

வள்ளிபுனம் சந்திக்கருகாமையில் தென்னங்கன்று மற்றும் பயன் தரு மரங்களுடன் 2ஏக்கர் காணி விற்பனைக்குண்டு தொடர்புக்கு. வாணி நகைமாடம்,கனகபுரம், கிளிநொச்சி. (6332)

***K.S.K கணினி நிலையத் தின் புதிய கட்டடத் திறப்புவிழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் 11.07.2005*** புதுக்குடியிருப்பில் இயங்கும் எமது கணினி நிலையத்தில் கல்வி கற்ற,கற்று வருகின்ற அனைத்து மாணவர் களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 09.07.2005 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற விருப்பதால் அனைத்து மாண வர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.


நிர்வாகம் (6320)

### பகல் பராமரிப்பு நிலைய விளையாட்டுவிழா

உடையார்கட்டு சுதந்திர புரம்அம்பலவாணர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களுக்கான வருடாந்த விளையாட்டுவிழா கடந்தவாரம் பகல் பராமரிப்பு நிலைய மைதானத் தில் இடம்பெற்றது.

நிகழ்விற்கான தமிழீழ தேசியக்கொடியை உடையார்கட்டு மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கவிநிலா ஏற்றிவைத்தார். தொடர்ந்து முன்பள்ளிக்கொடிகள் ஏற்றப்பட்டது விளையாட்டு நிகழ்வுகளாக இசை யும் அசைவும், திறனாய்வு நிகழ்வு கள்,வினோதஉடை போன்றன இடம் பெற்றன. (19)

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



29 - 06 - 1976

06 - 07 - 1995

### வீரவேங்கை—பூங்கண்ணன்

(நவரெட்ணம் கிரீஸ்துராஜா)

போர் என்று எழுந்த
புதுப்புலியே பூங்கண்ணா!
ஈர்ஐந்து ஆண்டின் பின்னும்
எம் இதயத்தில் வாழ்கின்றாய்..

1ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்.

(சி-12280)

## சாவு அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை குமாரசாமி

தட்டுவன்கொட்டி ஆனையிறவை பிறப்பிடமாகவும், கண்ணகி நகர் விசுவமடுவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை குமாரசாமி அவர்கள் நேற்று (05-07-2005) காலமாகிவிட்டார். அன்னார் கண்ணகையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இரத்தினம்,இராசம்மா, யோகம்மா, வீரசிங்கம், அமுதம்மா ஆகியோரின் சகோதரரும்,முருகராணி, அருள்குமரன் (முகாமையாளர் க.வ.ப.நோ. கூ. சங்கம் ), ரஞ்சித்குமரன், சிறிகுமார்,(ஊழியர்-கச்சேரி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவதாசன், யசோதாதேவி, கலைச்செல்வி,ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், யசிதா,தர்சிகா,மயூரன் பானுசன், பிருந்தா,பிரியங்கன், கீர்த்திகன், கீர்த்திகா, தர்மிலன்,தர்மிலா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (புதன்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் விசுவமடு 12ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
கு.அருள்குமரன்
(மகன்)

(6337)

### வைத்திலிங்கம் – குலசேகரம்பிள்ளை (விஜயன்)

(சரவணை நெடுந்தீவு,ஸ்கந்தபுரம்)

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவு, ஸ்கந்தபுரம் இல 268ஐ நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் குலசேகரம்பிள்ளை 03.07.2005 ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தபுரத்தில் காலமானார். அன்னார் காலம் சென்றவர்களான வைத்திலிங்கம் அன்னபூரணியின் மகனும், காலம் சென்றவர்களான சுப்பிரமணியம் பார்பதிப்பிள்ளையின் மருமகனும், காலம் சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், ஈசன் (கனடா), கருணாகரன், (உதயன்) நோர்வே), கருணாநிதி (கனடா), தயாநிதி (கனடா), ஐங்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், கருணாதேவி (கனடா), வேலாயுதம் (கனடா), சிவராசா (கனடா), சுபாஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கீதா, பரதன்,துவாரகா, தணிகையன், புனிதன், தமிழினி, சரண், கேசவன், துர்கா, ஆதவன், அபிராமி,விஸ்மன், நிவேதா ஆகியோரின் அன்புப் பேரனும், பேரம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்), காலம் சென்ற குமாரசிங்கம் மற்றும் இராசசேகரம்பிள்ளை, (பொன்னுத்துரை) காலம் சென்ற கனகரத்தினம் மற்றும் கேதாரநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நடேஸ்வரி (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரனும் சொ.சிவஞான சேகரம் (லண்டன்), விஸ்வலிங்கம் (லிங்கம்), மனோன்மணி, குமாரசாமி, அன்னலட்சுமி, திலகவதி, ஜெகராசசிங்கம் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.07.2005 நாளை பிற்பகல் ஸ்கந்தபுரத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**பிள்ளைகள்**

(5945)

### தவறி விட்டது

இல-471 திருநகர் கிளிநொச்சியில் வசிக்கும் வேதமாணிக்கம் ஜேம்ஸ் என்பவரின் அடையாள அட்டை (482610331v), சாரதி அனுமதிப்பத்திரம், ZoA நிறுவனத்தின் உத்தியோக அடையாள அட்டை, நிரந்தர பயண அனுமதி அட்டை என்பன 03.07.2005 அன்று கிஸ்ணர் கோவிலுக்கும் திருநகர் வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ZoA நிறுவனத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

தகவல்
**ஜேம்ஸ்**

(6331)

### தமிழீழ மாணவர் அமைப்பும் தமிழ்த் தொலைக்காட்சி வலையமைப்பும் [TTN]

இணைந்து பாடசாலை மாணவர்களிடையே நுண்ணறிவையும், பொது அறிவுத் தேடலையும் ஊக்குவிக்கும் நோக்குடன் நடாத்தும்

## அறிவுச் சமர்-2005

*மாபெரும் பொது அறிவுப்போட்டி*

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 100,000.00

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு: | ரூபா | 25,000.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா | 15,000.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா | 10,000.00 |
| ஆறுதல் பரிசுகள்: | ரூபா | 25,000.00 |
| சிறப்புப் பரிசுகள்: | ரூபா | 20,000.00 |

கிளிநொச்சியில் நடாத்தப்படும் அரையிறுதி இறுதிப் போட்டிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு உலகெங்கும் தமிழ்தொலைக்காட்சி வலையமைப்பு (TTN) மூலம் ஒளிபரப்புச் செய்யப்படும்.

பாடசாலையில் தரம் 10,11 இல் கல்வி கற்கும் மாணவர்கள் போட்டியில் பங்குபற்றலாம்.

கிளிநொச்சியில் நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளுக்கான போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதிகள் அனைத்தும் போட்டி ஏற்பாட்டுக் குழுவினரால் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களையும், விண்ணப்பங்களையும் பெறவிரும்பும் பாடசாலைகள் தமிழீழ மாணவர் அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

இணைப்பாளர்- அறிவுச்சமர்

(6335)


## வடமாகாணத்தில் முதன் முதலாக

### அறிமுகப்படுத்தியுள்ளோம்!



**Indoor-out door Large format Digital Printing**

### 6அடி முதல் 300 அடி வரை

*சகல வியாபார நிறுவனங்களுக்கான பெயர்ப்பலகைகள், பனர்கள்
*ஆலயங்களுக்கான திரைச்சீலைகள்
*CDக்களுக்கான ஸ்ரிக்கர் பிறிண்டிங்
*வாகனங்களுக்கான அலங்காரங்கள்
*திரையரங்குகளுக்கான போஸ்ரர்கள்
*திருமணப் பந்தல்களுக்கான வர்ண அலங்கரிப்புகள்
*ஸ்ருடியோக்களுக்கான அலங்கரிப்புகள்

ஆகியவற்றை ஒருவருட
உத்தரவாதத்துடன் குறைந்த கட்டணத்தில்
பெற்றுக்கொள்ள
யாழ். மண்ணில் ஒரே நிறுவனம்

**Out Put Media**
-Sticker paper
-Flex paper
-Hoted paper
-Backlit Flim
-Photo paper
-Vinyl paper

(சி.12307)

**MOORTHY LAZER DIGITAL COLOUR LAB**

Jaffna Road,Manipay.
T.P:- 0212222884

Stanley Road, Jaffna
T.P:-0714168475

# ஒசாமா பின்லேடன் பிடிபட்டால் வழக்குச் செலவு முழுவதையும் ஏற்பேன்

## -பின்லேடன் தம்பி எஸ்லாம் அறிவிப்பு



(வோஷிங்டன்)


**ஒசாமா பின்லேடன் பிடிபட்டால் அவரது விடுதலைக்கான வழக்குச்செலவு முழுவதையும் ஏற் பேன் என்று ஒசாமாவின் தம்பி எஸ்லாம் பின்லேடன் கூறி யிருக்கிறார்.**

ஒசாமாவின் தந்தை முகமது பின்லேடனுக்கு 22 மனைவிகள். இவர்கள் மூலம் 54 பிள்ளைகள் உள்ளனர்.இந்த 54 பேர் களில் ஒருவர் எஸ்லாம் ஒசாமாவின், மாற்றாந் தாய் மகன் ஆவார்.

இவர் ஒரு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறி யிருப்பதாவது; ஒருவர் மீது குற்றம் சுமத்தப்படும் போது அதை மறு த்து வாதாட அனைவருக்கும் உரிமை உண்டு. ஒசாமா பிடிபட்டால் அவர் மீது வழக்குத் தொடரப்படும். வழக்கு விசாரணையின் போது அவருக் காக நான் வழக்கை நடத்துவேன், அதற்கான செலவை நான் ஏற்பேன். இவ்வாறு எஸ்லாம் கூறினார்.



ஸ்கொட்லாந்தில் பாஸ்லேன் கடற்படை முகாமை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்த மக்கள் திட்டமிட்டுள்ள நிலையில் அந்த முகா மில் கட்டப்பட்ட சமாதான சுவரொட்டியின் கீழ் காவல் பணியில் ஈடுபட்டிருக்கும் பொலி சார் ஒருவர்.



தென்னாசியாவை சுமார் பத்துவருடங்களாக அச்சுறுத்தும் பறவைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை ஐக்கிய நாடுகள் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் கடந்த மார்ச்சில் வியட்நாமில் விவசாயி ஒருவரால் அழிக்கப்பட கொண்டு செல்லப்பட்ட வாத்துக்கள்.

# எகிப்து தூதரை விடுவிக்க ஈராக் அதிகாரிகள் முயற்சி



(கெய்ரோ)

ஈராக் தீவிரவாதிகளால் கடத்தப் பட்ட எகிப்து நாட்டுத்தூதர் இபாப் அல்ஷெரீப்பை விடுவிப்பதற்காக அந்நாட்டு அதிகாரிகளுடன் சேர்ந்து எகிப்து முயற்சி செய்து வருகிறது என்று எகிப்து அமைச்சர் அகமது அபுல் கெய்ட் தெரி வித்துள்ளார்.

"ஈராக் மக்களின் கோபத்தைப்புரிந்து கொள்ள முடிகிறது. ஈராக் மற்றும் எகிப்து மக்களின் நலனுக்காகத்தான் தூதர் இகாப்அல்ஷெரீ பாடுபட்டு வந்தார்.அவர் அரபு இனப் பற்றாளர் அவரைக்கடத்திச் சென்றவர்கள் நல்லபடியாக நடத்த வேண்டும்" என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.



உலகின் ஆயுத உற்பத்தியாளர் கொங்கோவில் கொலைக ளுக்கும்,சித்திரவதைகளுக்கும் உயிரூட்டும் நிலையில் அங்கு பாரம்பரிய சண்டைக்காகக் கூடியிருக்கும் போட்டி யாளர்கள்.

# அமெரிக்க விமானக்குண்டு வீச்சு ஆப்கானில் 17 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் ஒரு கிராமத்தின் மீது அமெரிக்க இரா ணுவம் விமானம்மூலம் குண்டுவீசி தாக்குதல் நடத்தியதில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 17 பேர் பலியானார்கள்.

ஆப்கானிஸ்தானில் குனார் மாநிலத்தில் அமெரிக்க உள வுக்குழு ஒன்று காணாமல் போய்விட்டது. காணாமல் போன உளவுக்குழுவினரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டு இருந்தது. அப்போது சிசல் கிராமத்தில் ஒரு வீட்டில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக இராணுவம் சந்தேகித்தது. அந்த இடத்தின் மீது, அமெரிக்க போர் விமானங்கள் குண்டு வீசித்தாக்கின. இதில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 17 பேர் பலியானார்கள். மாநில கவர்னர் அசதுல்லா வாபா இதை உறுதிப்படுத்தினார். பலியான பெண்கள், சிறுவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

குனார் மாநிலத்தாக்குதலில் அப்பாவிப்பொதுமக்கள் இறந் தார்களா என்பதுதெரியவில்லை என்று அமெரிக்க இராணுவம் கூறி யுள்ளது. இத்தாக்குதலில் அப்பாவிப்பொதுமக்கள் பலி யாகாமல் தடுக்க போதுமான நடவடிக்கை எடுத்த பிறகுதான் தாக்குதலைத் தொடங்கினோம் என்று அமெரிக்க இராணுவ அதிகாரி ஜேம்ஸ் யோண்ட்ஸ் கூறினார்.

# அயோத்தி ராமஜன்ம பூமி கோயில் வளாகத்தில் அதிரடியாகப் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல்

(அயோத்தியா)

அயோத்தி ராம ஜென்ம பூமி கோவில் வளாகத்தில் நேற்று தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியதுடன், கோயில் வளாகத் தினையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனையடுத்து பொலிசாருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச்சண்டைநடைபெற்றது. இந்தச் சண்டையில் ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டார் என்றும், மற்றொருவர் பிடி பட்டார் என்றும் முதல் கட்டத்தகவல்கள் தெரிவித்தன. மேலும் தீவிரவாதிகள் வந்த ஜீப்பினை ஓட்டிவந்த ஓட்டுனர் பொலி சாரால் கைதுசெய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து சண்டை முடிவிற்கு வந்தது.இதைத்தொடர்ந்து கோயில் வளாகம் பொலிசாரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது பொலிசாரின் கடும் தாக்குதலால் ஆறு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இராணுவத்தில் மூன்று பேர் காயமடைந்தனர். இதனிடையே தேசிய பாதுகாப்புப் படையினர் அயோத்தியா விரைந்துள்ளனர். இதனையடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்ததாக உத்தரபிரதேசமாநில உயரதி காரிகள் தெரிவித்தனர். கோயில் பகுதியில் மூன்று மட்டத் திலான பொலிஸ் வளையங்கள் அமைக்கப்பட்டு பொலிசார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என பைசாபாத் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இந்த வளையங்களையும் மீறி தீவிர வாதிகள் புகுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனிடையே ஆர்.எஸ் எஸ். மூத்த தலைவர் கிரிராஜ் கிஷோர் , ராம் மாதவ் ஆகியோரின் பாதுகாப்பு குறைபாடே இந்தத் தாக்குதல் நடக்கக் காரணம் என்று மத்திய அரசினைக் குற்றம் சாட்டியுள்ளார்.


# சுமாத்திராவில் நேற்றும் நிலநடுக்கம் சுனாமிப் பீதியால் மக்கள் ஓட்டம்



சுமாத்திரா தீவுப்பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்திய நேரப்படி காலை 7.22 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற் பட்டது. வழக்கமாக அங்கு ஏற் படும் நிலநடுக்கத்தை விட அதி களவில் நேற்று நிலநடுக்கம் ஏற் பட்டது. இது ரிச்டர் அளவில் 6.8 புள்ளியாக பதிவானதாக அமெ ரிக்க புவியியல்துறை தெரி வித்துள்ளது.

நேற்று ஏற்பட்ட நிலநடுக் கத்தில் ஏராளமான கட்டடங்கள் அதிர்ந்தன. சில இடங்களில் கட்டடங்கள் இடிந்ததாகவும் கூறப்படுகிறது. இந்தோனே சியாவில் பல்வேறு பகுதிகளில் இது உணரப்பட்டது.

வீடுகளில் இருந்தவர்கள் அலறி அடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். கடற்கரைப் பகுதிகளில் உள்ளவர்களும் 'சுனாமி' பீதியில் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள். மீண்டும் வீடுகளுக்குத் திரும்பாமல் அவர்கள் திறந்த வெளியிலேயே தங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



சீனாவில் நடைபெறும் நவீன ரயில்வண்டி கண்காட்சியில் கனடாவைச் சேர்ந்த விமானம் மற்றும் ரயில் உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திகளை காட்சிப்படுத்தியுள்ளார்.

# தினமும் 30 ஆயிரம் சிறார்கள் வறுமைக்குப் பலி தடுத்து நிறுத்த பணக்கார நாடுகள் முன்வருமா?

ஆபிரிக்காவில் உள்ள ஏழை நாடுகளின் வறுமையால் தினமும் 30ஆயிரம் சிறுவர்கள் இறக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த பணக்கார நாடுகள் முன்வருமா? என்ற எதிர் பார்ப்பிற்கு இன்று லண்டனில் நடக்கும் பணக்கார நாடுகளின் மாநாடு விடையளிக்கும். உலகின் பணக்கார நாடுகளான அமெ ரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, இத்தாலி, ரஷ்யா ஆகியவற்றின் மாநாடு ஸ்கொட்லாந்தில் இன்று தொடங்குகின்றது. இரண்டு நாட்கள் நடக்கும் இந்த மாநாட்டுக்கு இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயர் தலைமை தாங்குகின்றார். இந்த மாநாட்டில் ஏழை நாடுகளுக்கு எப்படி உதவுவது என்பது பற்றி விவாதிக்கப்படுகிறது. ஏழை நாடுகளின் மீதான கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஏழை நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.



பாக்தாத்தில் சியா முஸ்லிம் சட்டவாளரையும், அவரது மகனையும் இரண்டு மெய்ப்பாதுகாவலர்களையும் கொலை செய்த தாகக்கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

# வடக்கு கிழக்கு மாகாணங்களின் கல்வித் தரம் மிகவும் கீழ் நோக்கிச் செல்கின்றது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னை நாள் தலைவர்

(திருகோணமலை)

**உலக வங்கியின் நிதியுதவியுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் தேசியக் கல்வி ஆய்வு மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் தரம் நான்கு மாணவர்களின் கல்வித்தரம் பற்றி தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட மதிப்பீட்டில் நாட்டின் ஒன்பது மாகாணங்களில் கிழக்கு மாகாணம் எட்டாவது இடத்திற்கும், வடக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திற்கும் பின் தள்ளப்பட்டுள்ளதாக காணப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் கல்வித் தரம் கீழ் நோக்கிச் செல்வதையே இது காட்டுகின்றது.**

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னை நாள் தலைவரும் தற்போது வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக பணிபுரிபவருமான சி.தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருகோணமலை ஸ்ரீகோணஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் தின ஒன்று கூடல் நிகழ்வில் பங்குபற்றிப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இத் தேசிய மட்ட ஆய்வு தரம் நான்கு மாணவர்களின் தாய்மொழி, கணிதம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் 700 பாடசாலைகள் உட்படுத்தப்பட்டன. வடக்கு-கிழக்கு ஆகியன இதில் தனித் தனி மாகாணங்களாகவே ஆய்வு செய்யப்பட்டன. ஆய்வின் முடிவு வடக்கு கிழக்கு கல்வித் தரம் கீழான நிலையை நோக்கிச் செல்தையே காட்டுவதாக அமைந்துள்ளது. மிகவும் பயங்கரமான நிலையை நாம் எதிர் நோக்குகின்றோம். இது வடக்கு கிழக்கு கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்டோருக்கு ஒரு சவாலாக அமைகிறது. என்று தண்டாயுதபாணி தெரிவித்தார்.

தேசியக் கல்வி மற்றும் மதிப்பீட்டு நிலையம் இவ்வாண்டு தரம் எட்டு, தரம் பத்து மாணவர்களின் கணிதம், தாய்மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பெற்றுள்ள அறிவை ஆய்வு செய்யவிருக்கின்றது இந்த ஆய்வு எதிர் வரும் சனிக்கிழமை கொழும்பில் ஆரம்பமாக இருக்கின்றது என்றும் தண்டாயுதபாணி தெரிவித்தார்.

பழைய மாணவர் தின ஒன்று கூடல் நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற உப அதிபர் ஏ. அருணகுமார், சிறப்பு விருந்தினராக நிறைவேற்றுப் பொறியியலாளர் சிவகுமார் ஆகியோர் பங்கு பற்றினர். (25)

## கிளி. ஆங்கில மொழிக் கல்லூரியின் இரண்டாம் அணி வகுப்புக்கள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் தமிழீழ மாணவர் அமைப்பினரால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டு வரும் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆங்கில மொழிக் கல்லூரியின்இரண்டாம் அணியினருக்கான வகுப்புக்கள் நேற்றுமுன்தினம் 9.00 மணிக்கு தொடங்கிவைக்கப்பட்டது.

ஆங்கில மொழிக்கல்லூரியின் நிர்வாக உத்தியோகத்தர் செல்வி .நளாயினி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதல் நிகழ்வாக தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தேசியக் கொடியினை ஏற்றிவைக்க கல்லூரியின் கொடியினை கல்லூரிப் பணிப்பாளர் ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து புதியமாணவர்கள் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து சிறப்புரைகளைத் தமீழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சீ. நளன், தமிழர் புனர்வாழ்வுக்கழக கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் இராஜகோபால் ஆகியோர் ஆற்றினர்.

தொடர்ந்து கல்லூரியின் விரிவுரையாளர்களின் அறிமுகமும், புதிய அணி மாணவர்களின் அறிமுகமும் இடம்பெற்றன.




**உள்ளூர் அரச சார்பற்ற பத்து நிறுவனங்கள் ஒவ்வொன்றிற்கும் (ஐ.ஓ.எம்) புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பினால் 12 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய அலுவலக உபகரணங்களை கிளி.மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையச் செயலகத்தில் வைத்து (ஐ.ஓ.எம்) நிறுவனத் திட்ட அலுவலரினால் கையளிக்கப்படுவதனை படத்தில் காணலாம். (சோ)**

## வீரமுரசு நிகழ்வும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும்

(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளை புளியம் பொக்கணை பிரதேச வீரமுரசு எழுச்சி நிகழ்வும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை கிளி/ கல் வெட்டித் திடல் நாகேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

புளியம்பொக்கணை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சி.தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சு.பசுபதிப்பிள்ளை கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம் ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் அருள் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு ஈகச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

அதனையடுத்து நினைவுரைகள் இடம்பெற்றன. விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் பத்மநாதன், கிளி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை அரசறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன், அரசறிவியற் கல்லூரி பொறுப்பாளர் பார்த்தீபன் உட்பட போராளி கள் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு மட்டக்களப்பில் விவாதப்போட்டி

(மட்டக்களப்பு)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரும் தமிழீழக் கல்விக்கழகத்தினரும் இணைந்து உயர்கல்வி நிறுவன மாணவர்களிடையே விவாதச் சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்தினர். இதன் இறுதிப் போட்டியானது நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு தாழங்குடாப் பகுதியில் அமைந்துள்ள தேசியக் கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது.

விவாதச்சுற்று, தமிழ் மக்களின் விடிவுக்கு போர் அவசியமா? சமாதானம் அவசியமா? என்ற தலைப்பில் இடம் பெற்றது. இதில் போர் அவசியம் என்ற தலைப்பில் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களும், சமாதானம் அவசியம் என்ற தலைப்பில் மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுடன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்களும் பங்கு பற்றினர். இதில் போர் அவசியம் என வாதிட்ட மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

இந்நிகழ்வில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள், கல்விமான்கள், கிழக்கு மாகாண சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் செஞ்சுடர், மட்டு.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் விமல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் கரையோர வீதிகள் திருத்தப்படுமா?

## நடவடிக்கை எடுக்க பொது மக்கள் கோரிக்கை

(அலுவலசெய்தியாளர்)

வடமராட்சி கிழக்கில் சுனாமி இயற் கை அனர்த்தத்தின் பின்பும் சரி, முன்பும் சரி கரையோரப் பகுதி வீதிகள் திருத்தப்படுவது இல்லை. சுனாமியின் பின் வீதிகள் மணல் மேடுகளாகவே உள்ளன. இதனால் போக்குவரத்து கடினமாவதுடன் நீண்ட தூரம் வரை உந்துருளிகளையும், மிதிவண்டிகளையும் இறங்கித் தள்ளிக் கொண்டு போக வேண்டியுள்ளது.

மணல்மேடுகளாகவும், குன்றும் குழியுமாகவுமுள்ள இந்த வீதிகளை சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற் கொண்டு விரைவாக அமைத்துத் தரும் படி இடைத்தங்கல் முகாம் களில் வாழ்கின்ற மக்கள் வேண்டி நிற்கின்றனர். மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரை உள்ள வீதிகளே இவ்வாறு உள்ளன. சில இடங்களில் மணலினால் மூடப்பட்டுள்ள இவ்வாறான வீதிகள் மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள வீதிகளாகவே உள்ளன. இந்த வீதிகளால் போக்குவரத்து செய்வோர் பல சிரமத்தின் மத்தியிலே கடக்க வேண்டியுள்ளது.

இதை விட இடைத்தங்கல் முகாம்களில் வாழ்கின்ற மக்களுக்கு உணவுப் பொருட்கள், வீட்டு உபகரணங்கள் என்பனவற்றை பார ஊர்திகள் மூலம் கொண்டு செல்ல முடியாமல் உள்ளது. இவற்றினால் இடை இடையே களஞ்சியங்களை அமைக்க வேண்டிய தேவையும் உள்ளது. மக்களின் வேண்டு கோள் யாதெனில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எத்தனையோ தொண்டு நிறுவனங்கள் பணி புரிகின்றன. இவற்றுள் ஏதாவது ஒரு நிறுவனம் இந்த வீதிகளைத் திருத்தித் தர மாட்டார்களா? என மக்கள் கேட்கின்றார்கள். இந்த வீதிகளினால் பாதிக்கப்பட்டவர்கள் இப்பகுதி பாடசாலை மாணவர்கள் இவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் சமுகம் தர முடியாமல் போகின்றது. வியாபாரிகள் உரிய நேரத்தில் பொருட்களை சந்தைப் படுத்த முடியாமல் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். எனவே இந்த மக்களின் துன்பங்களை எல்லாம் செவிமடுத்து செய்த சேவையுடன் மகத்தான சேவையாக இதையும் செய்து தரும்படி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (தீ)

## வாழ்வோதய நிறுவன அனுசரணையுடன் ஊனமுற்றவர்களுக்கு சக்கர நாற்காலிகள்

(மன்னார்)

மன்னார் வாழ்வோதய நிறுவனத்தின் அனுசரணையுடன் ஊன முற்றவர்களுக்கான சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு அண்மையில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் வாழ்வோதய இயக்குநர் அருட்தந்தை எஸ். ஜேசுராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் ஆயர் இராயப்புயோசப் ஊனமுற்றவர்களுக்கான சக்கர நாற்காலியை வழங்கியுள்ளார். (18)

## இந்திய உயர்ஸ்தானிகர் - கடற்படை அதிகாரிகள்; மன்னாரில் கலந்துரையாடல்

(மன்னார்)

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் நிருபமராவ் நேற்று முன் தினம் மன்னார் சென்று தலைமன்னார் கடற்படை உயர் அதிகாரிகளைச் சந்தித்து உரையாடியுள்ளார்.. சேது சமுத்திரத் திட்டம் குறித்தும் பாதுகாப்பு நிலைமைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அரசாங்கமோ அல்லது கடற்படையினரோ அல்லது இந்தியத் தூதரகமோ உத்தியோக பூர்வ தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை. ஊயர்ஸ்தானிகரின் விஜயம் உறுதிப்படுத்தப்பட்ட போதும் அங்கு பேசப்பட்ட விடயங்கள் உறுதிப்படுத்தப்படா தவையாகவே உள்ளன.

இதேவேளை உயர்ஸ்தானிகரின் விஜயம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களின் ஒளிப்பட நாடாக்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21,32,18)

## சங்கிலிப்பாலம் புனரமைப்பிற்கு 450மில்லியன் ரூபா தேவை

(மன்னார்)

மன்னாரில் சங்கிலிப்பாலம் என அழைக்கப்படும் பெரியபாலத்தினை புனரமைப்பதற்கு450 மில்லியன் ரூபா தேவையென ஜப்பான் நாட்டு நிறுவனமான ஜாய்க்கா நிறுவனம் அறிக்கை யொன்றினை சமர்ப்பித்துள்ளது.

தினமும் இப்பாலத்தினால் பெருமளவு கனரக வாகனங்கள் பயணம் செய்வதாகவும் இதனை உடனடியாக புனரமைக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.


இதனடிப்படையில்மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியிலாளர் குணசேகரம் ஜோய்ஸ் குருஸ் தெரிவித்துள்ளார். (18)

யாழ்ப்பாணம்

# கரும்புலிகள் நாள்–ஜூலை 2005


### கிளிநொச்சியில்...





படம்:- சோதி

### முல்லைத்தீவில்...





படம்:- லோகீசன்

### மாங்குளத்தில்...





படம்:- சசி

### புதுக்குடியிருப்பில்...





படம்:- தவரட்ணம்

### வடமராட்சிகிழக்கில்...





படம்:- பிரதீபன்

### நெல்லியடியில்...







படம்:- காங்கேயன்

### மல்லாவியில்...





படம்:- சசி

### ஒட்டுசுட்டானில்..





படம்:- கவியரசன்

இப்பொழுது பந்து சனாதிபதி சந்திரிகாவின் கைகளிலேயே உள்ளது. பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம் விடுதலைப்புலிகளின் போக்குவரத்திற்கான பாதுகாப்பு ஆகிய இரண்டு விடயங்களில் அரசாங்கத்தின் முடிவும் செயற்பாடுமே இலங்கையின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவையாக இருக்கும். அதுவும் இம்முடிவுகளும் விரைந்து மேற்கொள்ளப்படு பவையாகவும் இருத்தல் வேண்டும்.

சுனாமி பேரலைகள் தாக்கிச் சுமார் ஆறு மாதங்கள் கடந்த நிலையில் கைச்சாத் தாகியுள்ள பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்தாகுமா என்ற நிலைமையைக் கடந்து அமுலாகுமா? என்ற கேள்வியைக் கொண்டதாக மாறியுள்ளது.

இலங்கையில் சிறிலங்கா ஆட்சியாளர் களுக்கும், தமிழ் தலைவர்களுக்கும் இடை

தமது உறுதியான ஆதரவைத் தெரிவித்தன. அத்தோடு அத்தகைய அமைப்பு ஒன்று உருவாக்கப்படாதுபோனால் சிறிலங்காவிற் கான நிவாரண உதவிகள் எவையும் வழங்கப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை உறுதிசெய்திருந்தன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்து சிறுபான்மை அரசாங்கமாக இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படினும் பரவாயில்லை. சர்வதேச நாடுகள், அமைப் புக்களிடம் இருந்து நிதிஉதவி பெறப்படுதல் என்பது அவசியமானதாக இருந்தது.

ஏனெனில் சுனாமிப்பேரலைகள் ஏற் படுத்திய பேரழிவு ஒருபுறம், நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை ஒரு புறம் என பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித் திருந்தன. இந்த நிலையில் ஜே.வி.பி ஆட்சியை விட்டு வெளியேறினும் கூட



இந்நிலையில் இப்பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டிற்கும், கடந்த கால உடன்பாடுகள் போன்றதொரு நிலை ஏற்படுமா? என்பதே இன்று ஆய்விற்கு உட்படும் விடயமாக உள்ளது.

கடந்த [illegible]ங்களில் தமிழ் தலைவர் களுடன் ச[illegible]ங்கா ஆட்சியாளர்கள் உடன்பாடு செய்துகொண்டபோதும், பின்னர் அவற்றைக் கைவிட்டபோதும் நிலவிய அரசியல் சூழ்நிலைக்கும், தற்பொழுது நிலவும் அரசியல்சூழ்நிலைக்கும் இடையில் பாரியளவிலான வேறுபாடு உண்டு. அதாவது கடந்த காலத்தில் உடன்பாடு கிழித்தெறியப்பட்ட போதோ, கிடப்பில் போடப்பட்டபோதோ இருந்த அரசியல் இராணுவ சூழ்நிலை இன்று இல்லை. முற்றிலும் மாறுபாடானதொரு சூழ்நிலையே இன்று உள்ளது.

குறிப்பாக பொதுக்கட்டமைப்பில் சிறி லங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் நிர்ப்பந்தத்தின் பெயரில் கையொப்பமிட்டது போன்றதொரு சூழ்நிலை அன்றிருக்க வில்லை. அதாவது இன்று போன்று அன்று உடன்பாடு சர்வதேச மயப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. அத்தோடு இன்றுபோல் அன்று தமிழர் தாயகத்தின் பெரும்பகுதி தமிழர்களின் கட்டுப்பாட்டில், நிர்வாகத்தில் இருக்கவும் இல்லை.

ஆனால் இவற்றிற்காக சிறிலங்கா அரசாங்கம் பொதுக்கட்டமைப்பை அமுல் செய்தாக வேண்டுமென்று வாதிட முனைய வில்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் முன்னர் போல் நடந்துகொள்ளுமானால் எதிர்விளைவு முன்னர் போல் பலவீன மானதாகவோ, அன்றி எதுவும் அற்றதாகவோ இருக்கமாட்டாது என்பதே சுட்டிக்காட்ட முற்படும் விடயமாகும்.

அடுத்த முக்கிய விடயமாக அதுவும் காலக்கெடுவுடன் கூடியதான விவகாரமாக உள்ள விவகாரம் விடுதலைப்புலிகளின்

இல்லை. அதாவது சிறிலங்கா அரசாங்கம் யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்பாக இருவேறுபட்ட வகையில் செயற்படுவதே முக்கியகாரணம் ஆகும். அதாவது சிறி லங்கா அரசாங்கம் ஒருபுறம் யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பேணுவது போன்று நடந்து கொள்கையில் மறுபுறத்தில் விடுதலைப் புலிகளை யுத்தத்திற்குள் சிக்கவைப்பதற்கான சீண்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த காலத்தி லிருந்தே சிறிலங்கா அரசு இத்தகைய தொரு நிலைப்பாட்டுடன் செயற்பட்டு வந்த தாயினும், அண்மையில் அதன் செயற்பா டுகள் தீவிரமாகியுள்ளது. குறிப்பாக கிழக் கில் விடுதலைப்புலிகளின் செயற்பாட்டை முடக்குவதில் சிறிலங்கா அரசு தீவிர அக் கறை காட்டி வருகின்றது.

இந்த வகையில் விடுதலைப்புலிகளின் தொடரணி மீது வெலிக்கந்தவில் நடாத் தப்பட்ட தாக்குதலானது மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாகக் கொள்ளப்படுகிறது. இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகள் தப்பித்துக்கொண்டமையானது அவர்களின் அதிர்ஷ்டமே ஒழிய சிறிலங்கா அரசு வழங் கிய பாதுகாப்பின் காரணமாகவல்ல.

இந்தவகையில் புலிகளின் போக்குவரத் திற்கான பாதுகாப்புத்தொடர்பாக இறுதியான முடிவொன்றை எடுக்கவேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதெனலாம். அதாவது சிறிலங்கா அரசு நடத்தும் மறை முகப்போரில் இனியும் போராளிகளை இழக்க விடுதலைப்புலிகள் இயக்கம் தயா ராக இல்லை.

ஆகையினால் போர்நிறுத்த உடன் பாட்டை உடனடியாக அமுலாக்கம் செய்யு மாறும், போக்குவரத்தின்போது விடுதலைப் புலிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறும் விடுதலைப்புலிகள் கோரியுள்ளனர். இதனை அரசாங்கம் நிறைவேற்றத்தவறின் அதாவது போர்நிறுத்த உடன்பாட்டை மதித்து நடக்கத்

# எதிர்காலத்தைத் தீர்மானிக்கப்போகும் சனாதிபதி சந்திரிகாவின் பதில்கள்!

யில் உடன்பாடுகள், ஒப்பநதங்கள் கைச்சாத் தாவதும் பின்னர் அவை கிழித்தெறியப்படுவ தென்பதும் ஒரு மரபு போன்று ஆகிவிட்ட விடயமாகும். ஆகையினால் பொதுக்கட்ட மைப்பின் அமுலாக்கமும் இத்தகையதொரு எதிர்பார்க்கையுடனேயே தமிழ் மக்களினால் நோக்கப்படுகின்றது.

அதற்கு ஏற்றால் போல் சனாதிபதி சந்திரிகாவும் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்தாகியதும் இவ் விவகாரம் முடிவிற்கு வந்துவிட்டது போல் இதன் அமுலாக்கம் குறித்து மௌனமாகிவிட்டதா கவே தெரிகின்றது. அதாவது வேறுவித மாகக் கூறின் நெருக்குவாரம் ஒன்று முடிவிற்கு வந்து விட்டது போன்று நடந்து கொள்வதாகவே தெரிகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் பொதுக்கட்டமைபில் கையொப்பமிட்டமைக்கு சர்வதேச சமூகத்தின் நெருக்குவாரமே முக்கியகாரணம் என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமே இல்லை. அவ்வாறு இல்லாதுவிட்டால் ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளி யேறுவோம் என மிரட்டிய நிலையிலும் - ஆளும் கட்சி சிறுபான்மையாகும் எனத் தெளிவாக உணர்ந்திருந்தும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பில் கையொப்பமிட எடுத்த முடிவானது ஜே.வி.பி ஆட்சியை விட்டு வெளியேறினால் ஏற்படக்கூடிய பாதிப்பை விட பொதுக்கட்ட மைப்பில் கையொப்பமிடாது விட்டால் மோசமான பாதிப்பைத் தான் சந்திக்க வேண்டியதாக இருக்குமென அவர் உணர்ந்திருந்தமையினாலேயே ஆகும்.

அதாவது சர்வதேச சமூக பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுதல் அவசிய மானதென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்த [illegible]டு, சிறிலங்கா[illegible]க்கு உதவி வழங்கும் [illegible]ம், அமைப்புக்களும் கூட இதற்குத்


நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு சில நடவடிக்கைகளை அதாவது ஆட்சியை சிறிது காலமாவது தக்கவைப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆனால் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திட முடியாத நிலையில் வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்படுமானால் நாட்டை நிர்வாகிப்ப தென்பதே பெரும் சவாலாகி விடும் என்பதை சனாதிபதி சந்திரிகா உணர்ந்திருந்தார்.

ஏற்கனவே நாட்டில் ஸ்திரமான ஆட்சி யின்மை, பலவீனமான உட்கட்டமைப்பு வசதியின்மை காரணமாக வெளிநாட்டு முதலீடுகளின் வரத்தின்மையும், விலைவாசி ஏற்றத்தினாலும் நாடு பெரும் சவாலை எதிர்நோக்கியதாக இருந்தது. இது குறித்து சர்வதேச நிதி நிறுவனங்களான உலகவங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கி யும் எச்சரித்துக்கூட இருந்தன. இவை குறித்து எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்தின் மீது பெரும் கண்டனம் எழுப்புபவையாக இருந்தன.

இந்நிலையில் ஆட்சிக்கு ஏற்படும் சவால்களை நிறைவேற்றுஅதிகாரத்தைக் கொண்டாயினும் ஓரளவு சமாளிக்கமுடியும். ஆயினும் பொருளாதார ரீதியில் ஏற்படும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாடுகளின் உதவிகள் அவசியமானதாக இருந்தன. இந்த நிலையில் தான் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவது என்ற முடிவிற்கு வந்திருத் தல் வேண்டும்.

ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை கிடப்பில் போட்டது போன்று நடந்துகொள்கிறார். தமது அரசாங்கம் எதிர் நோக்கியுள்ள சவால் ஆட்சியைத் தொடர் வதற்கான வழிவகைகளை ஆராய்வதிலுமே முக்கிய கவனம் செலுத்துபவராக உள்ளார்.

போக்குவரத்துத் தொடர்பான பாதுகாப்பு விவகாரமாகும். இவ்விவகாரத்தில் அரசாங் கத்தின் முடிவை அறிவிப்பதற்கென விடுதலைப்புலிகள் விடுத்த காலக்கெடுவில் ஒருவாரம் முடிய ஓரிரு நாட்கள் மட்டுமே இருக்கையில் அரசாங்கத்தரப்பு தீர்க்கமான முடிவொன்றை அறிவிப்புச் செய்ய வேண்டிய நிலை தோன்றியுள்ளது.



போக்குவரத்திற்குப் பாதுகாப்பு அளித்தல் விடயத்தில் அரசாங்கம் உறுதியான செயற்பாடு எதையும் மேற்கொள்ளாத நிலை ஏற்படுமானால் அது போர் நிறுத்தத்தையே கேள்விக்குள்ளாக்கும் வகையில் வளர்ச்சி அடையும் சாத்தியம் உள்ளது. இதனை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் போர்நிறுத்தக்கண்காணிப் புக்குழுவிடம் தெளிவாகச் சுட்டிக்காட்டியும் இருந்தார்.

இதில் அவர், போராளிகள், பொறுப் பாளர்கள் மீது தாக்குதல் நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் தொடர்ந்தும் இப்போர்நிறுத்த சூழலை தக்கவைப்பதோ, யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு ஏற்ப நாம் நடந்து கொள்வதோ சாத்தியமற்றதொன்றாக மாறும் எனத் தெளிவாகவே எடுத்துரைத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் இக்கடுமையான நிலைப்பாட்டிற்கு காரணம் இல்லாமல்

தவறின் விடுதலைப்புலிகள் இயக்கமும் போர்நிறுத்த உடன்பாட்டிற்கு மாறாகச் செயற்படத் தயாராகிவிட்டன என்பதையே அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களின் பேச்சுக்கள் வெளிப்ப டுத்துபவையாக உள்ளன.

இந்த வகையில் இன்று சனாதிபதி சந்திரி காவிடமே பந்து உள்ளது. இதனை அவர் எவ்வாறு கையாளப்போகின்றார் என்பதைப் பொறுத்தே பொதுக்கட்டமைப்பின் எதிர் காலம் மட்டுமல்ல யுத்தநிறுத்தத்தின் எதிர்காலமும் இலங்கையின் எதிர்காலமும் உள்ளதெனலாம். ஆனால் ஒன்று கடந்த காலங்களைப் போல் உடன்பாட்டைக் கிழித்தெறிதல், கைவிடுதல் என்பன இம் முறை இலகுவாக இருக்காது என்பது மட்டு மல்ல அதன் விளைவும் பாரியதாகவே இருக்கும் எனக் கூறலாம்.

ஜெயராஜ்

யாழ்ப்பாணம்

# கடந்த வாரத்தில்...

27 — 06 — 2005 — 03 — 07 — 2005



அதிவேக உந்துருளி இரண்டாவது அணியினரின் பயிற்சி நிறைவுநிகழ்வில் தேசியத்தலைவர் அவர்கள்

27

⇒ மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறுவர் உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் ஜோபேக்கர் கிளிநொச்சிக்கு வருகை தந்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.


⇒ வெலிக்கந்தைப் பகுதியில் இடம் பெற்ற விடுதலைப்புலிகளின் தொடரணி மீதான தாக்குதல் சம்பவ வேளையில், தரை வழிப் பயணத்தின் போது முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு முரணான வகையில் இராணுவத்தரப்பு நடந்து கொள்கிற தென தமது அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்ததோடு இத்தாக்குதலின் உண்மை நிலைகுறித்து கண்காணிப் புக்குழு அரசுக்கு தெரியப்படுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தி சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு கடிதமொன்றை அனுப்பினார்.

⇒ பொதுக்கட்டமைப்பை எதிர்த்து அம்பாறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

⇒ தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பொது மக்களின் காணிகள், வீடுகளிலிருந்து படையினரை வெளியேறக்கோரி தென்மராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் கண்டனப் பேரணியொன்று இடம்பெற்றது.

⇒ வவுனியா குருமன்காட்டில் பாரவூர்தி மோதி ஈருருளியில் சென்ற மாணவி பலி.

⇒ தீவகத்தில் இடம்பெற்ற பேரணியில் "பொறுத்ததுபோதும் பொங்கியெழு தலைவா" "தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தும் இறுதிப் போருக்கு ஆணையிடுங்கள்" என தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் தேசியத்தலைவரிடம் கோரியுள்ளனர்.



⇒ இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் செய்துகொண்டுள்ள பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை செயற்படுத்தப்படுவதற்கு எதிராக உடனடியாக இடைக் காலத்தடை உத்தரவு ஒன்றை விதிக்கும் படியும், அந்த உடன்பாடு சட்டவிரோதமானது என அறிவிக்கும் படியும் கோரி ஜே.வி.பி.சார்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

28.

⇒ இந்தியா- சிறிலங்காவுடன் எந்த வித பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் செய்யக்கூடாதென வலியுறுத்தி தமிழ் பாதுகாப்பு இயக்கம் தமிழகத் தலைநகர் சென்னையில் அடையாள உண்ணாவிரதமொன்றை நடத்தியது.

⇒ வவுனியாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினருடன் இணைந்து சேவையாற்றும் ஒருவர் படையினரின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

29.

⇒ ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பின் பணியாளரான கண்ணமுத்து அரசகுமார் பத்திரிகை விநியோகத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது விசேட அதிரடிப்படையின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

⇒ சிறிலங்கா அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் கைச்சாத்திட்டுள்ள, சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக்கட்டமைப்பைத் துரிதமாக செயற்படுத்த வேண்டுமெனக்கோரி தமிழ்க்கட்சிகளும், பல அமைப்புக்களும் இணைந்து கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தின.

⇒ வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் பாதாள உலகக் குழுவினர் நடத்திய தாக்குதலில் நான்கு சிறைச்சாலை அதிகாரிகள் காயம்.

⇒ மட்டக்களப்பு மாவட்டம் மாவடி வேம்பு வந்தாறு மூலையில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

⇒ கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் ஈருருளியில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவர் உந்துருளியில் வந்தோரினால் தடுத்துநிறுத்தி துப்பாக்கியினால் சுட்டுக்கொலை.

⇒ கொக்கிளாய் அப்பாட்டிவெட்டை எனுமிடத்தில் மூன்று மனித எழும்புக்கூடுகள் பொதுமக்களினால் கண்டுபிடிக்கப்பட்டன.

30.

⇒ யுத்த நிறுத்த உடன்படிக்கையை சரியான முறையில் பேணி போராளிகள் மற்றும் பொறுப்பாளர்களின் பாதுகாப்பான போக்குவரத்து நடைமுறைகளுக்கு ஏற்றவகையிலான முடிவை சிறிலங்கா அரசு பதின்நான்கு நாட்களுக்குள் தரவேண்டுமென கண்காணிப்புக்குழுத்தலைவர், நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக சிறிலங்கா அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதோடு, அவ்வாறு இல்லாது தாக்குதல்கள் தொடருமாயின் தொடர்ந்தும் இந்தப் போர்நிறுத்த சூழலைத் தக்கவைப்பதோ, யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு ஏற்ப நடந்து கொள்வதோ சாத்தியம் இல்லாத ஒன்றாக மாறும் என சு.ப.தமிழ்ச்செல்வன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ரப்ஹொக்லண்ட் மற்றும் இலங்கைக்கான நோர்வேயின் பிரதித்தூதுவர் உள்ளிட்டோரைச் சமாதான செயலகத்தில் சந்தித்துப் பேசியபோது தெரிவிப்பு.



⇒ தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களைச் சந்தித்த கண்காணிப்புக்குழுத் தலைவர் நோர்வே தூதரகப் பிரதித் தூதுவர் ஆகியோர் வெலிக்கந்தப் பகுதியில் வைத்து கிளைமோர் தாக்குதலுக்குள்ளான பேருந்தைப் பார்வையிட்டனர்.

⇒ மட்டக்களப்பிலிருந்து வலையிறவு பகுதிநோக்கி ஓட்டோ ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை.




⇒ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டருகே சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாக தமிழ் இளைஞர்கள் ஐந்துபேர் பம்பலப்பிட்டி பொலிசாரால் கைது.

01.

⇒ கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேராளர் சங்கம நிகழ்வு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது 2005ஆம் ஆண்டு போர் ஆண்டாகப் பிரகடனம்.

⇒ திருகோணமலையில் சட்டவிரோதமாக அரசியல் நோக்குடன் புத்தர்சிலை நிறுவப்பட்டதைக் கண்டித்தும், புத்தர் சிலையை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்துக்கு முன்பாக தமிழர் மனித உரிமையகத்தால் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.




02.

⇒ யாழ்.குருநகர் பகுதியில் சிறிலங்கா கடற்படையின் மின்பாய்ச்சப்பட்ட முட்கம்பி வேலியில் சிக்கி இளைஞர் ஒருவர் பலி.

⇒ மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

⇒ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை உலகவங்கியின் இலங்கைக்கான தலைவரும், ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதியும் சந்தித்துப் பேசினர்.



03.

⇒ தமிழீழ விடுதலைப்புலிகளின் லெப்.கேணல் இம்ரான்பாண்டியன் படையணியின் அதிவேக உந்துருளி இரண்டாவது அணியினரின் பயிற்சி நிறைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் கலந்து அதிவேக உந்துருளி அணியின் இராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

⇒ மேல்மாகாண சபையின் முதலமைச்சராகமீண்டும் ரெஜினோல்ட்கூரே பதவிப்பிரமாணம் செய்தார்.

---

## ~சனாதிபதித்தேர்தலில் வெற்றிபெற்றால்~

# சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து வீடுகளையும் மூன்று மாதங்களுக்குள் கட்டிக்கொடுப்போம்

## -ரணில் விக்கிரமசிங்க பிரச்சாரம்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று மூன்று மாதங்களுக்குள் சுனாமியால் வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் என ஐ.தே.கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சக்தியை வெளிப்படுத்தும் பேரணி நேற்று முன்தினம் காலிநகரை வந்தடைந்து அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இன்று வறுமை அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பை எதிர்கொள்ள அரசாங்கத்திடம் திட்டமொன்றும் இல்லை. வேலைவாய்ப்பு குறைந்துள்ளது. வாழ்க்கைப் பிரச்சினை அதிகரித்து இப்பிரதேசத்திற்கு வருமானம் பெற வழியில்லை. இவைதான் மக்களின் பிரதானமான பிரச்சினை. இவற்றைத்தீர்க்க முறையொன்று வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மூன்று மாதங்கள் செல்வதற்கு முன்னர் மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் சுனாமியினால் அழிவடைந்த சகல வீடுகளையும்கட்டுவோம். ஓரளவு உடைந்ததை முதலில் நிர்மாணிப்போம். அதே போல் நூறு மீற்றர் தடையை நீக்கி விருப்பமானவர்களுக்கு அங்கிருக்கவும், விருப்பமில்லாதவர்களுக்கு வேறு இடத்தில் வசிக்கவும் நாம் சந்தர்ப்பம் வழங்குவோம் எனவும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தமது கட்சியின் சார்பில் கூறுவதாகவும் அவர் தெரிவிததுள்ளார்.

# கதிர்காமரின் கருத்துக்குறித்து இராஜதந்திரிகள் அதிர்ச்சி

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளர்களாகச் செயற்பட்டுவரும் நோர்வே அந்த முயற்சியைவிட்டு வெளியேற வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் லகஷ்மன் கதிர்காமர் தெரிவித்த கருத்து, இராஜதந்திர வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்கவின் பிறந்த நாளையொட்டி எழுதப்பட்ட கட்டுரையொன்றில், நோர்வேயின் அனுசரணைப் பணியை விமர்சித்திருந்த கதிர்காமர், நோர்வே பக்கச் சார்பாகச் செயற்படுவதாகவும், வடக்கு, கிழக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியாவிட்டால், அவர்கள் தமது அனுசரணைப் பணியைவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்றும் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவது என்று கூறுவதன் மூலம், அவர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு சாதாரண ஒரு மக்கள் கட்சியாக மாறவேண்டும் என்றே தாம் எதிர்பார்ப்பதாகவும் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்த கதிர்காமர் டோக்கியோ பிரகடனத்துக்கு அமைய, வடக்கு, கிழக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தவும், மனித உரிமைகளை நிலை நாட்டவும், முஸ்லிம்களது உரிமைகளைப் பேணவும், விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவும் நோர்வே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அல்லாது போனால், அனுசரணைப் பணிக்கு வேறு எவருக்காவது வழிவிட்டு நோர்வே அதிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவேண்டும் என்றும் கதிர்காமர் தமது கட்டுரையில் வலியுறுத்தியிருந்தார்.

கதிர்காமரின் இந்தக் கருத்துக்கள் குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள இராஜதந்திர வட்டாரங்கள், மிகவும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் அவர் இவ்வாறான பொறுப்பற்ற கருத்துக்களைக் கூறியிருப்பது குறித்து விசனம் வெளியிட்டிருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது.

# உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்கு–கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நீகோட்)

## நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி

## ஆஅவ கடன் இல:- 1846 - சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல்-இல:46

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (NECORD) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

***அட்டவணை***

| ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| **VA/NECORD/RD/04** | நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு வீதியை சீர்படுத்தல் (0.00 கி.மீ – 2.8 கி.மீ) | M5 பெருந்தெருக்கள் | **192,000/=** |
| **AM/NECORD/RD/01** | லகுகல கிராம வீதியின் 1வது கி.மீ இல் உள்ள லகுகல பாலம் மீளமைத்தல் | M5 பாலங்கள் | **105,000/=** |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.
   - I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD டுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) விளங்க வேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும்.இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.
   - IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   - V. ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.
   - VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை **55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434. /பக்ஸ் :026-2227401. இணையத்தள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk )**

6. கேள்வி ஆவணங்களை 04.07.2005 இலிருந்து 18.07.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா **1000/-** ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் **தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை** என்ற விலாசமிடப்பட்டு, 25.07.2005 பி.ப. 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 18.07.2005 ஆம் திகதி அன்று பி.ப. 2.00 க்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

***த.லங்காநேசன்,***
***தலைவர், கேள்விச் சபை,***
***நீகோட் திட்டம்,***
***55, கந்தசுவாமி கோவில் வீதி,***
***திருகோணமலை.***

(சி.12275)


## ஜே.வி.பி முறையீடு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பில் கைச் சாத்திட்டதன் மூலம் சிறிலங்கா அரசு, ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தை மீறிவிட்டதாக ஜே.வி.பி குற்றம்சாட்டியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆழிப் பேரலை நிவாரண சபை தொடர்பான உடன்படிக்கையில் கைச் சாத்திட்டதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு நிதி வழங்குவதனை தடை செய்யும் சர்வதேச பிரகடனம் மீறப்பட்டுள்ளதாகவும் அதனால், அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிடவுள்ளதாகவும் அக்கட்சி கூறியுள்ளது.

ஜே.வி.பியின் வெளிநாட்டு நடவடிக்கைகள் தொடர்பான குழு இந்த முறைப்பாடு சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த வாரத்தினுள் இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்படும் என அக்கட்சியின் வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தமான குழுவின் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

## சனாதிபதி தலைமையில் பாராளுமன்றக்குழுக்கூட்டம்

(கொழும்பு)

சனாதிபதி தலைமையில் சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் நள்ளிரவு 12 மணி வரையும் நடைபெற்றதாக சனாதிபதி மாளிகை தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் கையொப்பமிட்டுள்ள பொதுக் கட்டமைப்பு ஆவணத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கு எதிராக நடத்தும் மக்கள் பேரணி குறித்தும் அதன் மூலமாக அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குடும்பஸ்தர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி சித்தாண்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த துப்பாக்கிச் சூடு மற்றும் கைக் குண்டுத் தாக்குதலில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரத்தினசிகாமணி மகாதேவன் (வயது-28) என்பவர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. படுகாயமடைந்த நிலையில் அவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இவரது வீட்டிற்கு வந்த இனம் தெரியாத நபர் ஒருவர் இடது முழங்காலுக்குக் கீழ் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு கைக்குண்டை வீசியதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் சிறிலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குஜராத்தில் பெரு வெள்ளம் 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்வு

## இறந்தோர் தொகை 150இற்கு மேல்



(குஜராத்)



குஜராத் மாநிலத்தில் வரலாறு காணாத அடைமழை பெய்துவருகிறது. மேலும் மழை நீடிக்கும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது. வெள்ளத்தால் சூழப்பட்ட கிராமங்களில் இருந்து ஐந்து இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டனர். இதுவரை மழை-வெள்ளத்துக்கு 150இற்கு மேற்பட்டோர் பலியானார்கள்.


குஜராத் மாநிலம் அடைமழையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பத்து நாளாக மழை நீடித்தது. அதனால் வெள்ளப்பெருக்கு காரணமாக மக்கள் அடிப்படை வசதிகளை இழந்துள்ளனர். பட்டினி கிடக்கும் மக்களுக்கு விமானப்படை விமானங்கள் மூலம் உணவுப் பொதிகள் போடப்படுகிறது. ஐந்து இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டு அங்கு அவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

மழை வெள்ளத்துக்கு இதுவரை 150இற்கு மேற்பட்டோர் இறந்துள்ளனர். மேலும் மழை நீடிக்கும் என்று வானிலை மையம் எச்சரித்துள்ளது. சாதாரணமாகவோ, பலமாகவோ மழை பெய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அகமதாபாத் புறநகர், ஆனந்த், வதோதரா, அம்ரேலி, பாரூச், நாடியாட் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஐந்தாயிரம் கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. வெள்ளத்திற்குப் பயந்து கிராம மக்கள் வீட்டுக் கூரைகளிலும், மரங்களிலும் ஏறியிருந்தனர். அவர்களை உலங்குவானூர்திகள் மீட்டன. ஏராளமான வீடுகள் மூழ்கிக் கிடக்கின்றன. 150 பிரதான வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாத அளவு சேதம் அடைந்தன. 1400 ஊராட்சிகளில் உள்ள வீதிகள் நீர் அரிப்புக் காரணமாக சேதமடைந்து கிடக்கின்றன. அங்கு பரோடா நகரில் உள்ள மிருகக்காட்சிச் சாலைக்குள் வெள்ளம் புகுந்ததால் விலங்குகள் பத்திரமான இடங்களுக்கு அனுப்பப்பட்டன.

---

# 6ஆம் மாத நினைவுநாள்



அப்பா உமைப்பிரிந்தோம் எனச் சொல்லும்
விதியை என்செய்வோம்! பாலுடன் சேர்த்து
பாசத்தையும் பகிர்ந்தீரே–அன்புடன் குழைத்து
அறிவையும் பகிர்ந்தீரே... மின்னாமல் முழங்காமல்
எம் வாழ்வில் இடி ஒன்று வீழ்ந்ததுவே...
தினம் வழிந்தோடும் விழிநீரில் எங்கள் விழி
தேடுது உங்கள் முகம் அப்பா நீ இன்றி
நாம் கதிகலங்கித் தவிக்கின்றோமே...
அப்பா எங்கே எங்கே என்று கேட்கும்
உங்கள் மழலை மகன்களுக்கு நீர்தினம்
வரும் பாதைகாட்டி ஏமாற்றுகின்றோமே
நீண்ட நெடும் பயணமாய் எங்கு தான்
நீர் சென்றீரோ... விழிதேடும் இடமெல்லாம்
விம்பமாய் வருவீரோ... அப்பாக்குட்டி
எமை புளுவாய் துடிக்கவிட்டு ஏன் இந்த
முடிவெடுத்தீர்? எம் ஈரவிழிகள் காய்ந்திடமுன்
மறுபடியும் இங்கு வந்து பிறந்திடுவீரோ...

## இராசையா யோகேஸ்வரன் (யோகன்)

தோற்றம்:30-01-1965 மறைவு : 02-02-2005

எம் குலவிளக்கின் ஆத்ம சாந்திக்கிரியை 06-07-2005 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும். எனவே கிரியை வழிபாட்டிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து ஆறுதல் நல்குமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

வித்யாபுரம்,
ஒட்டுசுட்டான்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(6180)

---

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கோதுமை மா**

# கேள்வி கோரல்

## யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் – 2005

01) யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட அளவிலான மெற்றிக் தொன் கோதுமை மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர் களிடமிருந்து கோரப்படுகின்றன. மாவை பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| விநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 யூலை | 500Mt |
| 2005 ஓகஸ்ட் | 500Mt |
| 2005 செப்ரெம்பர் | 500Mt |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 50000இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005-07-04ஆம் திகதி தொடக்கம் 2005-07-17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

02) கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள்வி முறி - Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

03) பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினைத் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005-07-18ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

04) நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.


05) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேணடும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

06) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்,**
**தலைவர் / அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை/**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்,**

(சி-12306)

# இங்கிலாந்து அணியின் திறனை கணக்கிட ஆஷஸ் தொடர் நல்லதொரு வாய்ப்பாகும்



-இன்சமாம்

இங்கிலாந்து அணியின் திறனை கணக்கிட ஆஷஸ் தொடர் நல்லதொரு வாய்ப்பாகும் என்று பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் கூறியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி வரும் ஒக்ரோபர் 22 ஆம்திகதி முதல் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டியில் விளையாட வுள்ளது.

நாசர் உசேன் தலைமையிலான இங்கிலாந்து அணி கடைசியாக 2000-01இல் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 1-0 என்ற கணக்கில் தொடரை வென்றது. 1961 -62ஆம் ஆண்டுக்கு பின் சொந்த மண்ணில் பாகிஸ்தான் அணி இங்கிலாந்திடம் தோற்றது அதுவே முதல் முறையாகும்.

தற்போது இங்கிலாந்து அணி நல்ல வலிமை பெற்றுள்ளது. அந்த அணியை எதிர்கொள்ள பாகிஸ்தான் அணி போட்டிக்கும் இன்னும் மூன்று மாதம் இருக்கையிலேயே திட்டம் தீட்ட ஆரம்பித்துவிட்டது.

இது குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது;

ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி வெளிப்படுத்தும் திறனைக் காண்பதன் மூலம் அந்த அணிக்கு எதிராக இந்த ஆண்டில் மோதவிருக்கும் தொடருக்கு பாகிஸ்தான் அணியை தயார்படுத்த நல்ல யோசனைகள் கிடைக்கும் ஆஷஸ் தொடர் தொடங்குவதை நான் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன். இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவுடன் மோதும் இந்த ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணியின் பலவீனம் மற்றும் பலத்தைக்கணக்கிட முடியும்.

கடந்தஆண்டில் இங்கிலாந்து அணி சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது. அந்த அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் கடும் போட்டியை கொடுத்து சவாலாக விளங்கும் என்று நம்புகிறேன். இந்தப் போட்டியை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் சிறப்பான முடிவைப் பெறவிரும்புகிறோம் என்றார்.

## மங்கைகளை இனி நாடமாட்டேன் மன்னிப்பு கோருகிறார் வோர்ன்


மங்கைகளை இனி நாடிச் செல்லமாட்டேன். இந்த ஒருமுறை மன்னித்து என்னை ஏற்றுக்கொள் என்றுஷேன்வோர்ன் தனது மனைவிக்கு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சாதனைகளுக்கு நிகராக வோர்னிடம் சர்ச்சைகளும் அதிகம் உண்டு.ஊக்கமருந்து விவகாரம், சூதாட்ட குற்றச்சாட்டு, புகை பிடித்ததை படம் பிடித்த போட்டோகிராபரை தாக்கிய சர்ச்சை உட்பட பாலியல் பிரச்சினைகளிலும் சிக்கி இருக்கிறார்.

இந்த நிலையில் வோர்ன் மீது கடந்த மாதம் மீண்டும் பாலியல் குற்றச்சாட்டு விசுவரூபமெடுத்தது. தன்னைக் கட்டாயப் படுத்தி உடலுறவு கொண்டதாக இங்கிலாந்தைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவர் வோர்ன் மீது பரபரப்பு குற்றச்சாட்டு கூறியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டு தணியும் முன்பு மற்றொரு பெண் ஒருவரும் பாலியல் குற்றச்சாட்டை வோர்ன் மீது சுமத்தினார்.


வோர்னின் தொடர்ச்சியான பாலியல் தவறுகளை பொறுமையுடன் பொறுத்து வந்த அவரது மனைவி சிமோனே அவரது எல்லை மீறிய செயலால் உச்சக்கட்ட வெறுப்புக்கே சென்று விட்டார். இதனால் அவர் வோர்னை பிரிய முடிவு செய்தார். இதனை இருவரும் கடந்த மாதம் கூட்டாக அறிவித்தனர்.

இந்த நிலையில் வோர்ன் மீண்டும் தனது மனைவியுடன் இணைந்து வாழும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். இனிமேல் மங்கைகளை நாடிச் செல்லமாட்டேன். பெண்கள் பின்னால் அலையும் பழக்கத்துக்கு முற்றுப் புள்ளிவைக்க ஆலோசனை பெற இருக்கிறேன். இந்த ஒருமுறையும் தவறை மன்னித்து ஏற்றுக்கொள்ளவும் என்று வோர்ன் தனது மனைவிக்கு தோழி ஒருவர் மூலம் தூதுவிட்டுள்ளார்.



'இன்டர்டோ போக்பைக்கான' கால்பந்துப் போட்டியில்,லென்ஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் போஸ்னன் அணியை வீழ்த்தியது. லென்ஸ் வீரர் அலோ டியரா (இடது),போஸ்னன் வீரர் பியோடரிடம் இருந்து பந்தைத் தட்டிச் செல்ல முனைகிறார்.


## விம்பிள்டன் இறுதி ஆட்டமே வாழ்க்கையில் சிறந்த ஆட்டம்



விம்பிள்டன் இறுதிப் போட்டியில் அன்டி ரொடிக் எதிரான ஆட்டமே தனது வாழ்க்கையின் மிகச் சிறந்த ஆட்டம் என்கிறார் ரோஜர் பெடரர்.

உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் தொடர் லண்டனில் நடந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அமெரிக்காவின் அன்டிரொடிக்கை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். இத் தொடரில் பெடரர் தொடர்ச்சியாக வெல்லும் மூன்றாவது பட்டம் இது.

புல்கள மைதானத்தில் கடைசியாக விளையாடிய 36 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். இந்த ஆண்டில் விளையாடியுள்ள 61 போட்டிகளில் 58 இல் வெற்றிகண்டுள்ளார். இப்படி வீழ்த்த முடியாத வீராகத்திகழும் இவர், அடுத்த ஆண்டிலும் விம்பிள்டன் பட்டம்வெல்வதாகக் கூறியுள்ளார். இவர் நேற்று அளித்த பேட்டியில் விம்பிள்டனில்' ஹாட்ரிக்' பட்டம் வென்றதன் மூலம் சாம்பிராஸ்,பிஜோர்ன்போன்ற ஜாம்பவான்கள் வரிசையில் இடம் பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இம்முறை இறுதிப் போட்டியில் ஆடிய ஆட்டமே எனது வாழ்க்கையின் மிகச் சிறந்த ஆட்டமாக கருதுகிறேன். இந்த வெற்றிநடை,அடுத்த ஆண்டும் தொடரும். எனது தொடர் வெற்றிக்குக் காரணம் தவறுகள் செய்யாமல் விளையாடுவது தான். என்னுடைய அடுத்த இலக்கு அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீரர் என்ற சாதனை படைக்க வேண்டும். இவ்வாறு பெடரர் கூறினார்.



புகழ் பெற்ற டூர்-டி-பிரான்சு சைக்கிள் பந்தய மூன்றாவது கட்டத்தை பெல்ஜியத்தின் டாம் பூனன் வென்றார்.



## கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு துணுக்காய் பிரதேசத்தில் வி. போட்டி

துணுக்காய் பிரதேசத்தில் ஐயன்கன்குளம் தமிழ் வித்தியாலயத்தில் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு விளையாட்டு விழா நிகழ்வு ஐயன்கன்குளம் பாடசாலையின் புதிய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு வித்தியாலய அதிபர் ப.தர்பபுவதி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொதுச்சுடரினை துணுக்காய்ப்பிரதேச அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் சத்தியா ஏற்றிவைக்க. தமிழீழ தேசியக்கொடியை திலீபன் மருத்துவமனை பொறுப்பாளர் கதிர்ச் செல்வி ஏற்றிவைத்தார். மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடரினை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்தனர். அதனைத்தொடர்ந்து விளையாட்டு நிகழ்வினை விளையாட்டுப் பொறுப்பு ஆசிரியர் த. நித்தியாணந்தம் ஆரம்பித்து வைத்தார். போட்டிகளில் உதைப்பந்தாட்டத்தில் மாவீரர் கலைக்குமார் அணியும், மாவீரர் இயல்வாணன் அணியும் பங்குபற்றின வலைப் பந்தாட்டத்தில் மாவீரர் முகுந்தா,மாவீரர் தமிழரசி, மாவீரர் சுடர் ஆகிய மூன்று அணிகளும் பங்குபற்றின.இந்நிகழ்வில் வெற்றியீட்டிய அணிக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது (24)

## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

கரும்புலிகள் நாளை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட த.பொ.மே.நிறுவனத்தினால் பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகளில் ஒன்றான மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி நேற்றுமுன்தினம் பி.ப 4.00 மணிக்கு சம்பூர் பிரதேசத்தில் உள்ள நல்லூர் கரைச்சி திடலில் ந்டைபெற்றது. இந் நிகழ்வு திருமலை மாவட்ட த.பொ.மே. நிறுவன மாவட்ட பொறுப்பாளர் மங்களேஸ் தலைமையில் நடைபெற்றது. இப் போட்டியினை திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் ஆரம்பித்து வைத்தார். இப்போட்டியில் 20 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## கங்குலி மீதான ஒருநாள் போட்டித்தடை சுதந்திரமான விசாரணை நடத்தவேண்டும்



இந்திய கிரிகெட் அணித்தலைவர் கங்குலி மீது விதிக்கப்பட்ட ஆறு ஒரு நாள் போட்டிகள் மீதான தடை தொடர்பாக சுதந்திரமான விசாரணை ஒன்றை நடத்துமாறு சர்வதேச கிரிக்கெட்சபையிடம் இந்திய கிரிக்கெட்சபை கோரியுள்ளது. கங்குலி கடந்த ஏப்ரலில் பாகிஸ்தானுடன் நடைபெற்ற போட்டியின்போது தாமதமாக பந்து வீசியதற்காக மேற்படி தடை விதிக்கப்பட்டது. இது மீள் பரிசீலனைக்கு எடுக்கப்படாதுவிடில் இலங்கையில் நடைபெறும் போட்டிகளில் அவர் பங்கேற்க முடியாது போகலாம். ஐ.சி.சி. இது தொடர்பாக தகுந்த பதிலை அறிவிக்கும் என இந்திய கிரிக்கெட்சபைத் தலைவர் ரண் பீர்சிங் மகேந்திரா தெரிவித்துள்ளார்.



## அபாயகரமான பந்துவீச்சு மன்னிப்புக்கேட்டார் பிரட்லீ




நடந்து முடிந்த நட்வெஸ்ட் கிண்ண முக்கோண கிரிக்கெட்போட்டியின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்தின் ரெஸ் கொதிக்குக்கு எதிராக அபாயகரமான முறையில் பந்து வீசியதை தான் ஒப்புக் கொள்வதாக அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் பிரட்லீ தெரிவித்துள்ளார். இவரது பந்து வீச்சு குறித்து நடுவர் டேவிட்ஷெப்பர்ட எச்சரிக்கை விடுத்ததாகவும், அதற்காக பிரட்லீ மன்னிப் கோரியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே போன்ற பந்து வீச்சுப் பாணியை பாகிஸ்தானின் அப்துல்ரசாக்கும் கடந்த சனவரியில் நடந்த நியூசிலாந்துக் கெதிரான போட்டியில் கையாண்டார். அப்போது பந்து பிரண்டன் மக்கலமின் தோளை பதம் பார்த்தது குறிப்பிடத்தக்கது.

இன்று 2012 ஒலிம்பிக் போட்டிகளை ஏற்று நடத்தும் நாடு அறிவிக்கப்படவுள்ளது. லண்டனுக்கு ஆதரவு திரட்டுவதற்காக தனது மனைவி விக்டோரியாவுடன் இங்கிலாந்து கால்பந்து அணி தலைவரான டேவிட் பெக்காம் நேற்று முன்தினம் சிங்கப்பூர் வந்தார். (அடுத்த படம்) மாட்ரிடுக்கு ஆதரவாக வந்த ஸ்பெயின் கால் பந்து வீரரால் கோன்சலேஸ்

## சிந்தனைக்கு



நாம் ஒன்றுபட்ட மக்களாக ஒரேதேசிய சக்தியாக - அணிதிரண்டு எமது எதிரியின் சவாலை எதிர் கொள்ள வேண்டும்.

தமிழீழதேசியத்தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-07-2005


தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## விசுவாசம்!

இலங்கையில் சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்களாக செயற்பட்டு வரும் நோர்வே அந்த முயற்சிகளைக் கைவிட்டு வெளியேற வேண்டும் என சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளமை இராஜ தந்திர வட்டாரங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

அது மட்டுமன்றி கதிர்காமர், விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனவும்,வடக்கு - கிழக்கில் சனநாயகத்தை ஏற்படுத்த முடியாது விட்டால் அனுசரணைப் பணிக்கு வேறு எவருக்காவது வழிவிட்டு நோர்வே அதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கதிர்காமர், நோர்வே அரசு அனுசரணைகளின் பணியில் இருந்து வெளியேற வேண்டும் எனத் தற்பொழுது கோரியிருப்பது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயை அனுசரித்துப் போக முயற்சிக்கையில் லக்ஷமன் கதிர்காமர் இத்தகைய எதிர்ப்பினைத் தெரிவிப்பதானது அதிலும் சனாதிபதி சந்திரிகாவின் பிறந்த நாள் தொடர்பான கட்டுரையில் விமர்சித்திருப்பது இவ் ஆச்சரியத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால் ஒன்று நோர்வேயை கதிர்காமர் விமர்சித்துள்ளமையும், விடுதலைப்புலிகளிடம் ஆயுதங்களைக் களைய வேண்டும் எனக் கதிர்காமர் கோரியிருப்பதும் புதியதொன்றல்ல. யுத்த நிறுத்தத்திற்கு முன்னும், கதிர்காமர் இவ்வாறு பேசியதுண்டு. கதிர்காமரின் இத்தகைய கூச்சலானது அடிப்படையில் தனது இருப்பினை உறுதிப்படுத்துவதற்கான அறிவிப்பே ஆகும்.

லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருக்கலாம். ஆனால் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அனுசரணையாளர்களாகச் செயற்படும் நோர்வேத் தரப்பினர் கதிர்காமரைக் கண்டு கொள்வதாகவே இல்லை. அவர்கள் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேசிக் கொள்ளவே விரும்புகின்றனர்.

இத்தகையதொரு நிலைக்கு நோர்வே தரப்பும் காரணமல்ல. பொ.ஐ முன்னணி ஆட்சிக் காலத்தில் சமாதான ஏற்பாட்டாளராக நோர்வே செயற்பட்டவேளையில் நோர்வேத் தரப்பின் சிறப்புத் தூதுவரான எரிக் சூல்ஹெய்மிற்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டவர் கதிர்காமர். எரிக் சூல் ஹெய்ம் மாற்றப்பட வேண்டும் என அந்நாட்டு பிரதமருக்குக் கடிதமும் எழுதியவர். அன்றும் பேரினவாதத்திற்கு தனது விசுவாசத்தை வெளிப்படுத்தவே அவ்வாறு கூறினார். இதனால் சமாதான முயற்சிகளும் முடங்கிப் போயின.

இந் நிலையில் கதிர்காமருடன் உறவு வைத்துக் கொள்ளுதல் என்பது நோர்வே தரப்பிற்கு விருப்பமற்றதாகவும், அவசியமற்றதாகவும் இருந்திருக்கலாம். அடுத்ததாக விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் களைய வேண்டும். சனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும் என்பன போன்ற கதிர்காமரின் கோரிக்கை எல்லாம் தனது இருப்பினைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே. அதாவது கதிர்காமரின் தேவை சிங்களப் பேரினவாதத்திற்கு குறைவடையும் போதெல்லாம் தனது இருப்பிற்காக தனது விசுவாசத்தை அளப்பெரியதெனக் காட்ட வேண்டியதேவை கதிர்காமருக்குண்டு.

எடுத்துக் காட்டாக ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேத் தரப்பைச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோதும் கூட கதிர்காமர் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். அல்லது புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடரும் என்ற கூச்சலைக் கைவிடாததைச் சுட்டிக்காட்ட முடியும்.

அன்று அவர் அவ்வாறு கூச்சலிட்டமைக்கு சமாதானச் சூழ்நிலை ஒன்று உருவானால் தனது இருப்புக் கேள்விக்குள்ளாகி விடும் எனக் கருதியது போன்றே தற்பொழுதும் பொதுக்கட்டமைப்பு போன்ற விடயங்கள் நாட்டில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றத்தைக் கொண்டு வந்து விடுமோ? என்ற சந்தேகத்தை அவருக்குக் கொடுத்துள்ளது. இதன் விளைவே தற்போதைய கூச்சலுக்குக் காரணமாகும்.

மேலும் கதிர்காமர் இன்று சனாதிபதி சந்திரிகாவிற்கு விசுவாசமாக இருப்பதா?, ஜே.வி.பி க்கு விசுவாசமாக இருப்பதா? என்ற குழப்ப நிலையிலும் உள்ளார். ஏனெனில் சந்திரிகா குமாரதுங்கவை விட ஜே.வி.பி அவருக்கு உயர் பதவி (பிரதமர்) வழங்குவதாக ஏற்கனவே ஆசை காட்டியிருந்தது.

இந் நிலையில் லக்ஷ்மன் கதிர்காமர் இதில் யாருக்கு விசுவாசமாக இருத்தல் என்பதற்கு முன் பௌத்த பேரினவாதத்திற்கு விசுவாசமாக இருத்தல் அவசியம் என்பதை உணர்ந்துள்ளார். இதன் வெளிப்பாடே நோர்வேக்கும், புலிகளுக்கும் எதிரான கூப்பாடாகும். ஆனால் நாய்கள் குரைக்கட்டும், ஒட்டகங்கள் பயணத்தைத் தொடரட்டும் என்பதே நோர்வேதரப்பிற்கு நாங்கள் கூறக்கூடியதாகும்.

# கரும்புலிகளின் அர்ப்பணிப்புக்கள் தமிழரை தலைநிமிர வைத்துள்ளது

-கரும்புலிகள் நினைவு நிகழ்வில் இளந்திரையன்

தேசியத் தலைவரின் மதிநுட்பமான வழிகாட்டலில் கரும்புலிகள் தம்முயிரை அர்ப்பணித்ததன் பயனாகவே இன்று தமிழரின் உரிமையை அடித்துக் கேட்கின்ற உன்னத நிலையை அடைந்துள்ளோம் என மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார். கரும்புலிகள் தினத்தையொட்டி நேற்று முன்தினம் கிரான்குளத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய இளந்திரையன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடிதேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய இளந்திரையன் தமதுரையில்; அன்று நாம் அகிம்சை வழியில் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றோம். அகிம்சை வழியிலேயே தமிழர்களின் வேண்டுகோளை விடுத்தோம். பலன் கிட்டவில்லை. அரசியல் அதிகாரமும் எமக்கு பலமில்லாததாகவே காணப்பட்டது. ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தோம். அதன் ஊடாக பல்லாயிரக் கணக்கான எமது உடன் பிறப்புக்கள், தமிழனுக்கான எமது உரிமையை வேண்டி நாம் இன்று தலை நிமிர்ந்து அஞ்சியும், கெஞ்சியும் கேட்காது அடித்துக் கேட்கின்ற உயர்ந்த நிலைக்கு ஆளாக்க தங்களின் இரத்தத்தை இந்த மண்ணுக்காக அர்ப்பணித்தனர். அந்த வகையிலேயே தங்களது மரணம் இந்தத் திகதியில் தான் இடம்பெறும் என அறிந்தவர்களாகவே கரும்புலிகள் தம்முயிரைத் தியாகம் செய்தனர் 1983 ஆம் ஆண்டு எமது மக்களை பேரின வாதிகள் துடிக்கத்துடிக்க கொன்று குவித்தார்கள். ஆனால் இன்று கரும்புலிகளின் தியாகத்தால் சர்வதேசமே விழிப்படைந்துள்ளது. இதன் காரணமாகவே கடற்கோளால் பாதிக்கப்பட்ட வட கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கான பொதுக்கட்டமைப்பை நாம் கோரினோம். இன்று இந்தப் பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஏதோ ஒரு பெரிய விடயத்தை சாதித்துவிட்டார்கள் எனப் பேரினவாதிகள் எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதும், அரசாங்கம் இதனைப் பெரிதுபடுத்தி காட்டுவதும் எமக்கு வேடிக்கையாக இருப்பதுடன் இவர்கள் தானா? நிரந்தர சமாதானத்தை எமக்கு உருவாக்கப் போகிறார்கள் என்ற சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்பியுள்ளது. விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்துக்கு நாம் வந்துள்ளோம். விரைவாக அறுவடை செய்ய வேண்டிய நிலைக்கு நாம் ஆளாகியுள்ளோம்.

இன்று எமக்கு இங்கு பாதுகாப்பளிப்பது கரும்புலிகளின் தியாகத்தின் வடிவமேயாகும். இந்தக் கரும்புலிகளை நாம் மீண்டும் மீண்டும் நினைக்கின்ற போதுதான் வீரவரலாறு நெஞ்சங்களில் நிலைத்து நிற்க முடிகின்றது என்றார்.

# புலிகளின் குற்றச்சாட்டில் நியாயமுள்ளது அரசு நம்பிக்கையை உருவாக்கவேண்டும்

~ஐ.தே.கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் 14 நாள் காலக்கெடுவை அரசு உதாசீனம் செய்தால் மீண்டும் போர்மூளும் அபாயம் ஏற்படலாம் எனவும் அரசாங்கம் நிதானமாகவும், பொறுப்புணர்வுடனும் சிந்தித்து செயற்பட வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம்,விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிற்கு அரசு உத்தரவாதமளிக்க வேண்டுமெனவும்,அதே போன்று விடுதலைப்புலிகளும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை பராதுவையிலிருந்து காலி நோக்கி பயணித்த மக்கள் சக்திப்பேரணியில் சென்று கொண்டிருந்த களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,முன்னாள் அமைச்சருமான டாக்டர். ராஜித சேனரட்ன இதைத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரம சிங்க பிரதமாராக இருந்த காலத்தில் மிகவும் பிரயாசைப்பட்டு விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அந்த உடன்படிக்கை மூன்றரை வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சிறு சிறு தவறுகள் இருதரப்பினராலும் இடம்பெற்று வந்த போதிலும்,பெரிய அளவில் எதுவும் இடம்பெறவில்லை. அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்களால் விடுதலைப்புலிகள் அரசுமீது சந்தேகம் கொள்ளத் தொடங்கியுள்ளனர். இச்சந்தேகங்களைக் களைந்து புலிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புலிகள் தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் சந்தேகங்கள், குற்றச்சாட்டுகள் தொடர்பில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது. அரசு இதனை ஒரு போதும் உதாசீனம் செய்துவிட முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஜே.வி.பி யின் தலைவருக்கு அவா

(கொழும்பு)

அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கானதமது ஆசையை ஜே.வி.பி யின் தலைவர் சோம வன்ச அமரசிங்க வெளியிட்டுள்ளார். கொழும்பு ஆங்கில ஊடக மொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் தமது இந்த விருப்பத்தை வெளியிட்டுள்ளார். ஜே.வி.பி. சார்பாக அடுத்த அரசதலைவருக்கான தேர்தலில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவாரா? என்று கேட்கப்பட்டபோது அதற்குச் சாதகமாகப் பதிலளித்த ஜே.வி.பி யின் தலைவர், அந்த வேட்பாளர் யார் என்ற விபரத்தைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

எனினும், சனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தமக்குண்டு என்பதை ஏற்றுக்கொண்ட அவர், சனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிப்பதற்காக சிறிதுகாலம் அந்தப் பதவியை தாம் வகிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தேசப்பற்றுள்ள சக்திகளை இணைத்துக் கூட்டமைப்பொன்றை உருவாக்கி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குத் தயாராகப் போவதாக முன்னதாக அமரசிங்க தெரிவித்து வந்தார்.

இது தொடர்பாக இந்த ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின்போது, தமது இந்தக் கூட்டமைப்பில் இதுவரையில் நான்கு முஸ்லிம் கட்சிகள் இணைந்துகொண்டிருப்பதாகவும், தென்பகுதியில் இயங்கிவரும் மற்றுமொரு கட்சியும் தம்முடன் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பி.யுடன் இணைந்து கொள்ளுமா என்று கேட்கப்பட்டபோது, அதனை மறுதலித்த அவர், ஜாதிக ஹெல உறுமயவினர் ஜனநாயக நடைமுறைகளை ஏற்றுக் கொள்பவர்கள் அல்ல என்றும்,

சிறுபான்மையினரது உரிமைகளை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய கூட்டமைப்பு அரசாங்கம் அடுத்த வரவுசெலவுத் திட்டம் வரையிலுமே தொடர்ந்து நீடிக்க முடியும் என்றும் அவர் இந்தச் செவ்வியின்போது தெரிவித்துள்ளார்.

# சிறிலங்காவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 100 பேர் மீது இலஞ்ச ஊழல் விசாரணை!

(கொழும்பு)

சுமார்100இற்கு மேற்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த பொலிஸ் அதிகாரிகளில், மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும், மூன்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும், பத்து பொலிஸ் அத்தியட்சகர்களும் ,எட்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் அடங்குவார்கள் எனவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்கள் விசாரணைகளின்போது சமர்ப்பிக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. சிறிலங்கா வரலாற்றில் இவ்வளவு தொகை பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒரே தடவையில் இவ்வாறு இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றமை இதுதான் முதல்தடவை என்று தெரிவிக்கப்படுகிறது.



கரும்புலிகள் நினைவான இறுவட்டினை கேணல் ஆதவன் வெளியிட்டுவைக்க தேசியத்தலைவர் அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார்.

# பிறரை எதிர்பார்க்காது எம் தேவைகளை நாமே பூர்த்திசெய்துகொள்ளவேண்டும்

## -மட்டு- அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு

(மட்டக்களப்பு)

பிறரை எதிர்பாராது எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்ய வேண்டுமென மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்தார். நேற்றுமுன்தினம் நரிப்புல் தோட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கான வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு ஆரம்ப நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தளபதி கேணல் பானு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

இங்குள்ள மக்களின் நிலை மிகவும் துன் பகரமானதாக காணப்படுகின்றது. படுவான்கரையில் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டும். இங்கு வீடமைப்பதற்கான நோக்கம் சுகாதார முறையில் மக்கள் வாழ வேண்டும் என்பதுதான்.

புலம்பெயர்ந்த மக்கள் நிதியைச் சேகரித்து தருகின்றார்கள். அவர்கள் இங்குள்ள மக்களின் நிலையை அறிந்த வண்ணமுள்ளார்கள். மட்டக் களப்பு மாவட்டத்தில் சகல வளங்களுமுள்ளது. கடல், ஆறு மீன்பிடி வேளாண்மை செய்கை, வீட்டுத் தோட்டம் போன்ற சுய தொழில் முயற்சி களில் நீங்கள் ஈடுபடலாம்.

அதேபோல் கொக்கட்டிச்சோலையில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியுள்ளது. இவைகள் ஊடாக சுய தொழிலுக்கான கடன் பெற்று தொழில் செய்ய வாய்ப்புள்ளது. நாம் பிறரை எதிர்பாராது எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்ய வேண்டும் எனக்கூறினார்.

இந்நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் செ.சீசர் தலைமையில் ஆரம்பமானது. முதல் நிகழ்வாக அக வணக்கம் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், தளபதி பிரபா, மற்றும் வவுணதீவு உதவி பிரதேச செயலாளர் ந.வில்வரெத்தினம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டார்கள். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இருபதாண்டு நிறைவை முன்னிட்டு நிறுவப்படும் மேற்படி வீட்டுத்திட்டத்தில் மூன்று பயனாளிகளின் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டு வைபவம் இடம் பெற்றது

### மக்கள்...

உயர் அதிகாரிகளுக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரின் பாதுகாப்புக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரையும் கடமையில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நான்காவது நாளான நேற்றுக் காலியில் இருந்து பேரணி ஆரம்பமானது. இங்கு ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கம் தற்போது இல்லை. இது நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டியது முதலாவது விடயமாகும். இன்று இலங்கையில் எதிர்க் கட்சி மாத்திரமேயுள்ளது. எனவே இங்கு முப்படைகளும், அரச அதிகாரிகளும் நன்கு நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒரு விடயமுள்ளது. அரசாங்கக்கட்சி ஒன்று இல்லாத விடத்து எப்படிப் பணியாற்ற வேண்டும் என்பதை நினைத்து மிகவும் கவனமாகப் பணியாற்ற வேண்டும் என்றார்.

இப் பேரணியில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர் இங்கு வாழ்க்கைச் செலவுக்கு அதிகரிப்பதற்கான கோசங்கள் சுனாமி நிவாரண புனரமைப்பு ஒழுங்காக மேற்கொள்ளப்படாமைக்கான கோசங்கள் சமாதானத்தை விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்ற கோசங்கள் எழுப்பட்டன. பெந்துல என்ற இடத்தை இந்தப் பேரணி வந்தடைந்துள்ளது.

### பொதுக்கட்டமைப்பு....

இந்நிலையில் நேற்று கூடிய பாராளுமன்றத்தில் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக இருநாள் விவாதம் நடைபெறும் என்றும் விவாதத்திகதி அனைத்துக்கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

கடந்த மாதம் இறுதியில் பொதுக்கட்டமைப்பை சபை முதல்வர் மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்தபோது ஜே.வி.பி யினர் அமளியில் ஈடுபட்டதால் சபை நடவடிக்கைகள் நேற்று செவ்வாய்க்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

### தமிழர்...

முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

தென்மராட்சியில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் மீசாலைச் சந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பந்தலில் கரும்புலிகளுக்குஅஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் பெருந்தொகையான வர்த்தகர்களும், பொதுவமைப்புகளின் பிரதிநிதிகளும்,பொது மக்களும் கலந்துகொண்டனர். கொடிகாமத்திலும், கைதடியிலும், சாவகச்சேரியிலும் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. பொது மக்கள் நீண்ட வரிசையில் நின்று கரும்புலி மாவீரர்களுக்கு பூமாலைகள் அணிவித்தும், மலரஞ்சலி செலுத்தினர். மற்றும் தாயக விடுதலை வேள்வியில் தங்களது உயிர்களை ஈகம் செய்த கரும்புலிகளின்படங்கள் தாங்கிய கப்பல் வடிவிலான நினைவு ஊர்திபவனியை தென்மராட்சி வணிகர் ஒன்றியங்களின் முன்னாள் தலைவர் சற்குணராசா மலர்மாலையினை அணிவித்துத் தொடங்கிவைத்தார். மற்றும் யாழ்.பிரதேச அரசியல்துறையின் ஏற்பாட்டில் கரும்புலிகளின் உருவப்படங்கள் தாங்கிய நினைவு ஊர்தி யாழ் .பிரதேசமெங்கும் மக்கள் அஞ்சலி செய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தென்மராட்சியில் மாலை மீசாலை மாவடிப்பிள்ளையார் ஆலய முன்றலில் கலைநிகழ்வுகளும், கருத்துரைகளும்,மற்றும் தமிழீழ மகளிர் இசைக் குழுவின் இன்னிசைக் கானங்களும் இடம்பெற்றன.

கிளிநொச்சியில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றன.

கிளிநொச்சி கந்தசாமி ஆலயம் முன்பிருந்து மாலை ஐந்து மணிக்கு கரும்புலி மாவீரர்களை ஒன்றுசேர நினைவு கூரும் பொது உருவப் படத்தினையும், கரும்புலி மாவீரர்களான கப்டன் மில்லர், கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரின் உருவப் படங்களை மக்கள் தாங்கி வந்தனர்.

இந்த ஊர்வலத்திற்கு முன்னர் அணியிசைக் குழுவினரும் எழுச்சிப் பேரணியாக பிரதான வீதி வழியாக நகர மக்களுக்கு மத்தியில் கரும்புலி மாவீரர்களை நினைவு கூரும் ஊர்தியுடன் நகர்ந்து கிளிநொச்சிப் பிரதேச சபை வளாகத்தில் அமைக்கப்பெற்ற சிறப்புப் பந்தலில் நி[illegible] நிகழ்வுகள் இடம்பெற்றன.

[illegible]நற்று மாலை ஐந்து மணியள[illegible]வில் மருதங்கேணி இ.த.க. பாடசாலை மைதானத்தில் கரும்புலிகளை நினைவுகூரும் நிகழ்வு இடம்பெற்றது. கடற்புலிகளின் பெற்றோர் மருதங்கேணி பாடசாலையிலிருந்து மங்களவாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டனர். பெற்றோர்கள் சுடரேற்றிவைக்க கலைநிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. இவற்றுடன் ஒலிநாடாக்கள், ஒளிபேழைகள் என்பன மாவீரர்களின் பெற்றோர்களுக்கு வழங்கப் பட்டன.

கிளிநொச்சி தமிழீழ அரசியல் துறை நடுவப்பணியகத்தில் கரும்புலிகள் நாள் வணக்க நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் முதன்மைச் சுடரினை ஊடகஒருங்கிணைப்புப் பிரிவுப் பொறுப்பாளர் நரேஷ் ஏற்றி வைத்தார். தமிழீழத்தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களுக்கான ஈகச்சுடரேற்றி, மலர்மாலை அணிவித்து, மலர்வணக்கம் இடம்பெற்றது.

தமிழீழ நிதித்துறையின் இளந்தென்றல் வாணிப நடுவப்பணியகத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றன. நிதித்துறைப் போராளி சாந்தன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடந்தன. கரும்புலிகள் நாளை ஒட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டன. பேபி ஆசிரியையின் நெறியாழ்கையில் உருவான சங்கநாதம் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரின் நாடகம் ஆகியவையும் இடம்பெற்றன.

கிளிநொச்சி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி மாவீரர்நினைவு மண்டபத்திலும் கரும்புலிகள் நாள் நினைவு நிகழ்வுகள் நடந்தன. பொதுச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை படையணியின் மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் கடற்கதிர் ஏற்றினார். கடற்புலி மாவீரர்களின் பொது உருவப்படத்திற்கு படையணிப்போராளி பாரத் ஈகச்சுடர் ஏற்றினார். படையணிப் போராளி வைத்தி நினைவுரையினை ஆற்றினார்.

கிளிநொச்சி காவல்துறை நடுவப் பணியகத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. நடுவப்பணியகக் கண்காணிப்பாளர் சி. மாதவன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட கண்காணிப்பாளரான பிரதம பரிசோதகர் செ. தனஞ்செயன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை காவல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் கானகன் ஏற்றிவைத்தார்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கரும்புலிகள்நாள் நிகழ்வு மிகவும் எழுச்சியாக இடம்பெற்றுள்ளது. புதுக்குடியிருப்புச் சந்தியில் அமைந்துள்ள கரும்புலிகள் நினைவாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வு வணிகர் கழகத் தலைவர் அருள்நாதர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. கரும்புலிகள் நினைவாலயத்திற்குள் மாதர் சங்கத்தால் பொங்கல் பொங்கி மக்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு தொழில்சார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதேவேளை வள்ளிபுனம் பாடசாலையில் பாடசாலை அதிபர் சுப்பிரமணியேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

கரும்புலி எழுச்சி நாள் நிகழ்வுகள் முல்லைத்தீவில் கரும்புலி மாவீரர்களின்களின் பெற்றோர் கௌரவிப்புடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றது.நேற்று மாலை ஐந்து மணிக்கு முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு ஆரம்பமானது. இதில் 65 இற்கும் அதிகமான கரும்புலி மாவீரர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. தொடர்ந்து முல்லை பொது விளையாட்டு மைதானம் வரை மாவீரர்களின் பெற்றோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இங்கு கூட்டம் இடம்பெற்றது.

உடையார்கட்டு மூங்கிலாறு மட்டு-அம்பாறை மாவீரர்மண்டபத்தில் கரும்புலி மாவீரர் தியாகிகளின் நினை வெழுச்சிநாள் மிகவும் சிறப்பாக மட்டு-அம்பாறை மாவீரர் மண்டப பொறுப்பாளர் ராயு தலைமையில் இடம்பெற்றது.

இங்கு பொதுஅறிவுப்போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

கரும்புலிகள் நாள் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்துஐயன்கட்டு இடதுகரையில் நடைபெற்றது. காலை 8.30 மணியளவில் முத்துஐயன்கட்டு ஜீவநகர் மக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட கரகாட்டம், கும்மிநடனத்துடன் ஜீவநகர் முன்பள்ளியிலிருந்து ஊர்வலமாக முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலையை வந்தடைந்து அங்கு நிகழ்வுகள் முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க பாடசால்லை அதிபர் ந. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

காவடி நடனத்துடன் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு ஊர்வலம் நீர்ப்பாசன வளாகத்தைச் சென்றடைந்து கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அதிபர் அருமைச்சந்திரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இங்கு நினைவுரைகளும் இடம்பெற்றன. பொருண்மிய மதியுரையகத்தால் (ரெக்) பொங்கல் பொங்கி பரிமாறப்பட்டது.

நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் காலை 10.30 மணியளவில் நெடுங்கேணி மத்திய விளையாட்டுக் குழு உறுப்பினர் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

முள்ளியவளைப் பிரதேசத்தில் பிரதேச சபை செயலகத்திலிருந்து கரும்புலிகள் திருவுருவப்படங்கள் தாங்கிய பேரணி வித்தியானந்தாக் கல்லூரியைச் சென்றடைந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாண்டியன்குளப் பிரதேச மக்கள் ஏற்பாட்டில் நெட்டாங்கண்டல் பொது அமைப்பும்பொது மக்களும் இணைந்து நெட்டாங்கண்டல் கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பகத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

கரும்புலிகள் நாளையொட்டி மாங்குளம் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமான பேரணியானது கரும்புலி கப்டன் மில்லர், கரும்புலி கப்டன் அங்கயற்கன்னி, ஆகியோரின் திருவுருவப்படங்களைத் தாங்கியவாறு லெப். கேணல் போர்க்கின் உருவச்சிலை அமைந்திருக்கும் இடத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தை வந்தடைந்தது. தொடர்ந்து காலை ஒன்பது மணியளவில் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தேசியக் கொடியை ஏற்றிவைக்க கரும்புலிகளின் பொதுப்படத்திற்கும், கப்டன் மில்லர், கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரின் உருவப்படங்களிற்கும் சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டது.தொடர்ந்து லெப். கேணல் போர்க்கின் உருவச்சிலைக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதேபோன்று மல்லாவி அனிஞ்சியன்குளம் பாடசாலைக்கு முன்பாக மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான பேரணியானது பாண்ட் வாத்திய அணிவகுப்பினைத் தொடர்ந்து கரும்புலி மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி பவனிவர மக்கள் பேரணி மல்லாவி வண்ணன் விளையாட்டு மைதானத்தைச் சென்றடைய அங்கு நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசங்களில் கரும்புலி நாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம் பெற்றன.

நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு பாண்டியன்குள பாலிநகர் பொது மண்டபத்தில் பாண்டியன்குளப் பிரதேசப் பொறுப்பாளர் இலக்கியன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

துணுக்காய் பிரதேச மல்லாவி மாவீரர் மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு மல்லாவி மத்தியகல்லூரி அதிபர் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தில் பிரதான நிகழ்வுகள் மன்னார்,அடம்பன், ஆண்டாங்குளம் மத்திய மகாவித்தியாலயத்திலும், பேசாலை புனித பற்றிமா மத்திய மகாவித்தியாலயத்திலும் இடம்பெற்றன.

மேலும் வவுனியா, மற்றும் தென்தமிழீழப்பகுதிகளிலும் கரும்புலிகள் நினைவு நிகழ்வுகள் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன. (41,28,05, லோ, கு. 20,தீ,ச,24,08, 19, சோ,11,கா,27,18)

மெகா
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
10-07- 2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
யாழ்ப்பாணம் கன்னாகம்
சாவகச்சேரி நெல்லியடி கிளிநொச்சி
(சி-12146)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது